# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2023 – 2024

| | | |
|---|---|---|
| மானியக் கோரிக்கை எண். 41 | – | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை |
| மானியக் கோரிக்கை எண். 51 | – | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு |

**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**

வருவாய் மற்றும்
பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

# பொருளடக்கம்


| பொருள் | பக்கங்கள் |
|---|---|
| முன்னுரை | 1 – 2 |
| வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு | 3 – 99 |
| நில நிருவாகம் | 100 – 134 |
| நிலச் சீர்திருத்தம் | 135 – 149 |
| நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி | 150 – 159 |
| நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் | 160 – 179 |
| தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள் | 180 – 192 |

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2023-2024

## 1. முன்னுரை

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது மாநில நிருவாகத்தின் முதுகெலும்பாக விளங்குவதுடன், நீடித்த நிலையான சமுதாய முன்னேற்றத்திற்கு அச்சாணியாக திகழ்கிறது. தற்போது செயல்பட்டு கொண்டியிருக்கிற பெரும்பான்மையான துறைகள் வருவாய்த் துறையிலிருந்தே உருவாக்கப்பட்டதால் அத்துறைகள் யாவும் வருவாய்த்துறையின் சேவைகளை சார்ந்தே உள்ளன. இத்துறையானது அரசின் பல்வேறு சமூகப் பொருளாதார திட்டங்களை செயல்படுத்தி சீரான சமூகப் பொருளாதார முன்னேற்றத்தினை உருவாக்குவதை இலக்காக கொண்டுள்ளது.

இத்துறை பின்வரும் ஆணையரகங்களாக செயல்பட்டு வருகிறது.

i. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் (சமூக பாதுகாப்புத் திட்டம் உட்பட)

ii. நில நிருவாக ஆணையரகம்,
iii. நிலச் சீர்திருத்த ஆணையரகம்
iv. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி ஆணையரகம்
v. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம்

வரவு செலவு திட்ட ஒதுக்கீடு: வரவு செலவுத் திட்டம் 2023–2024 ஆம் நிதி ஆண்டில் கோரிக்கை எண். 41, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.8199.09 கோடியாகவும் மற்றும் கோரிக்கை எண்.51–இல் ரூ.1500.01 கோடியாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்துறை மாவட்ட நிருவாகம், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்குதல், அரசு நிலங்கள் மேலாண்மை, நில ஆவணங்கள் மேலாண்மை, நில அளவை மற்றும் நிலவரி திட்டப் பணிகள், நிலச் சீர்திருத்தம் சார்ந்த பணிகள் மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற பிரதான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 2. வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

2.1 வருவாய் நிருவாக ஆணையர், மாவட்ட நிருவாகத்திற்கான மேற்பார்வை அலுவலராகவும் மற்றும் மாநில நிவாரண ஆணையராகவும் செயல்பட்டு வருகிறார்.

2.2 இத்துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகள் பின்வருமாறு:-

i. பொது வருவாய் நிருவாகம்
ii. நில வருவாய் வசூல்
iii. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துதல்
iv. சான்றுகள் வழங்குதல்
v. பொது மக்கள் குறை தீர்க்கும் பணிகள்
vi. பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு
vii. பல்வேறு சட்டங்களை அமல்படுத்துதல் மற்றும் செயலாக்கம்

இத்துறையில் கிராம அளவிலிருந்து மாவட்ட அளவு வரை கள அளவிலான அலகுகள் உள்ளன.

### 2.3 மாவட்ட நிருவாகம்

நிருவாகத்தை திறம்பட செயல்படுத்த ஏதுவாக மாநிலம் 38 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு,

ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பல்வேறு துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட நீதிபதியின் மேற்பார்வையின்கீழ் செயல்பட்டு வருகின்றனர்.

## 2.4 கோட்ட நிருவாகம்

ஒவ்வொரு மாவட்டமும் நிருவாக நலனுக்காகவும், சிறப்பாக செயல்படும் நோக்குடனும், சார் ஆட்சியர் / வருவாய் கோட்ட அலுவலர் தலைமையில் 94 வருவாய் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## 2.5 வட்ட நிருவாகம்

வட்டாட்சியரின் தலைமையில் வட்ட நிருவாகம் இயங்கி வருகிறது. பட்டா, அடங்கல், வருமானம், இருப்பிடம், வாரிசு மற்றும் அனைத்து வகையான சான்றிதழ் வழங்குதல் போன்ற பணிகளில் வட்டாட்சியருக்கு, துணை வட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் உதவுகின்றனர். நிருவாக நலனை கருத்தில் கொண்டு, தற்போது 314 வட்டங்கள் செயல்பட்டு வருகின்றது.

## 2.6 குறுவட்ட நிருவாகம்

ஒவ்வொரு வட்டமும், கிராமங்களை உள்ளடக்கிய குறுவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. குறுவட்டத்தை வருவாய் ஆய்வாளர்

நிருவகிக்கின்றார். கிராம நிருவாக அலுவலர்களின் அனைத்துப் பணிகளை மேற்பார்வையிடுவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்போது மாநிலத்தில் மொத்தம் 1195 குறுவட்டங்கள் உள்ளன.

## 2.7 கிராம நிருவாகம்

தமிழ்நாட்டில் மொத்தம் 16,743 கிராமங்களில், கிராம நிருவாகம் செயல்பட்டு வருகிறது. அரசின் நலத்திட்டங்கள் அனைத்து குடிமக்களுக்கும் சென்றடைய ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராம நிருவாக அலுவலர்கள் வருவாய் நிருவாகத்தின் அடிப்படை களப்பணியாளர்களாக செயல்படுகின்றனர். பல்வேறு சான்றிதழ்கள் வழங்குதல், அரசு நலத்திட்டங்களுக்கான தகுதிகளை சரிபார்த்தல், நிலவரி வசூல் செய்தல், அரசு நிலங்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.8 வருவாய் நிருவாகப் பணியாளரமைப்பு

வருவாய் நிருவாக அலுவலக ஆணையர் அலுவலகத்தில் 437 அலுவலர்கள்/ பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிருவாகத்தின் கீழ், கிராமம் முதல் மாவட்டம் வரை, 53,082 அலுவலர்கள்/ பணியாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

## 2.9 நில வருவாய்

தமிழ்நாட்டில் உள்ள நிலங்களின் வகைபாடு மற்றும் தன்மைக்கு ஏற்ப அரசாணை (நிலை) எண்.544, வருவாய்த் (வ.நி.1(1)) துறை, நாள் 20.10.2010–இன்படி பின்வருமாறு நிலவரி தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது

**அட்டவணை 2.1**

| வ.எண். | விவரம் | தொகை / ஏக்கர் |
|---|---|---|
| 1. | புஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.2/– |
| 2. | நஞ்சை நிலத்திற்குத் தீர்வை | ரூ.5/– |
| 3. | ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து அனுபவித்து வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆக்ரமணத் தீர்வை | ரூ.5/– |
| 4. | பட்டா ஒன்றுக்கு குறைந்தபட்ச கேட்புத் தொகை | ரூ.1/– |

வருவாய்த் தீர்வாய நிகழ்வின்போது ஒவ்வொரு கிராமத்தின் ஆண்டு வருவாய் கணக்குகள் இறுதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டிலும், ஜூலை 1ஆம் தேதி முதல் ஜூன் 30 ஆம்தேதி வரை நிலவரி வசூலிக்கப்படுகிறது.

## 2.10. அடங்கல்

ஒவ்வொரு கிராமத்திலும், கிராம நிருவாக அலுவலரால் பராமரிக்கப்படும் ஒரு முக்கியப் பதிவேடாக அடங்கல் விளங்குகிறது. நிலத்தின் பரப்பு, தீர்வை, தண்ணீர் தீர்வை பருவவாரியாக

விவசாயிகளால் பயிர் செய்யப்படும் பயிர்கள் விவரம், விளைச்சல் விவரம், பாசன ஆதார விவரங்களைக் கொண்டு ஜி–அறிக்கையினை தயார் செய்திட உதவுகிறது, உணவு தானிய உற்பத்தி விவரம் பெறவும், வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதற்கும் அடங்கல் மிகவும் அவசியமானது.

இதர துறைகளின் நலன் கருதி, அனைத்து மாவட்டங்களின் வருவாய் பதிவேடுகள், பயிர் விவரங்கள், பயிர்வாரியான பரப்பளவு விவரங்கள் மற்றும் விவசாயிகளின் நிலஉரிமை விவரங்களை இணையம் மூலம் இணைக்க பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டு வருகிறது. பயிர் விவரங்கள் மற்றும் அடங்கல் ஆகியவற்றை பெறுவதற்கு இப்புதிய இணையதளம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் ஒவ்வொரு துறையும் தங்களுக்கு கீழாக வரும் திட்டங்களுக்கான உதவித் தொகையை வழங்குவதற்கு அடங்கல் குறித்த விவரங்கள் தேவைப்படின் அதனை பெற்றுக் கொள்ள ஏதுவாகும், ஒவ்வொரு துறையும் துறைகளுக்கு கீழான திட்டங்களை முறைப்படுத்தவும் விவசாயிகள் சான்றிதழ் வேண்டி பலமுறை விண்ணப்பம் செய்வதையும் தவிர்க்க இயலும். மேலும், இதன் மூலம்

காகித அடங்களின் தேவை குறைக்கப்பட்டு கிராம நிருவாக அலுவலர்களின் பணிச்சுமையை குறைக்க முடியும்.

## 2.11 வருவாய் கட்டடங்கள்

மாவட்ட நிருவாகத்தில் வருவாய்த்துறை முக்கிய அங்கம் வகிப்பதால் வருவாய்த்துறைக்கு தேவையான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் வழங்குவது குறித்து அரசால் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் ஆகியோருக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் உள்ளன.

## 2.12. சமூகப் பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களை பாதுகாக்கும் வகையில் ஓய்வூதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் அனைத்து தகுதியுள்ள பயனாளிகளுக்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. 2023-2024 ஆம்

நிதியாண்டிற்கு அனைத்து ஓய்வூதியத் திட்டங்களுக்கும் ரூ.5337.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2023 முடிய 34,62,034 பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

**அட்டவணை – 2.2**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை (31–03–2023 வரை) |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 14,36,569 |
| 2 | இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் | 63,769 |
| 3 | இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 5,29,728 |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 4,04,345 |
| 5 | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 6,16,016 |
| 6 | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 1,18,462 |
| 7 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 25,655 |
| 8 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | 2,63,194 |
| 9 | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம். | 4,296 |
| | **மொத்தம்** | 34,62,034 |

# அட்டவணை-2.3

| வ.எண். | திட்டத்தின் பெயர் | ஒன்றிய அரசின் பங்கீடு ரூ | மாநில அரசின் பங்கீடு ரூ |
|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத்திட்டம் | 200/- | 800/- |
| | | 500/- | 500/- |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 300/- | 1200/- |
| 3. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 300/- | 700/- |
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | - | 1500/- |
| 5. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம். | - | 1000/- |
| 7. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | - | 1000/- |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (OAP, DWP, DDWP) | - | 1000/- |
| 10. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (DAPS) | - | 1500/- |

## அட்டவணை – 2.4

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத்திட்டம் | ஆதரவற்றவராக மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.<br>வயது – 60 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 2 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாக மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>வயது – 40 மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |
| 3 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்<br>வயது – 18 மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் நிலை – 80 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல் இருத்தல் வேண்டும். |

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் தேசிய சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற தகுதிகள் பின்வருமாறு:–

## அட்டவணை -2.5

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தகுதி / நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | வேலையற்றவராக இருத்தல் வேண்டும். தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது – 18 மற்றும் அதற்கு மேல் மாற்றுத்திறன் நிலை – 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல். |
| 2. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும். வயது – 18 மற்றும் அதற்கு மேல் அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம். | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். வயது –60 மற்றும் அதற்கு மேல் நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |

| | | |
|---|---|---|
| 4. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதிய திட்டம் | ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது –30 மற்றும் அதற்கு மேல்<br>சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்(மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 5. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | ஆதரவற்ற திருமணமாகாதபெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>வயது –50 மற்றும் அதற்கு மேல்<br>அசையா சொத்து ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் (மேலும், அரசின் எந்தவொரு திட்டத்தின்கீழும் பயனாளிகளுக்கு இலவச வீடு ஒதுக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரரின் அல்லது பயனாளிகள் நிலையான சொத்து (அல்லது) சொத்தின் மதிப்பில் இதனை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) |
| 6. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதிய திட்டம் (OAP, DAP, DWP, DDWP) | OAP, DAP, DWP மற்றும் DDWP ஆகிய திட்டங்களின் தகுதிகள் அடிப்படையில் பயன்கள் வழங்கப்படுகின்றன. |

## 2.13 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்– இணைய வழி விண்ணப்பம்

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற விரும்பும் பொதுமக்களுக்காக இணைய வழியில் விண்ணப்பிக்க எளிய முறையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இணைய வழியில் பெறப்படும் மனுக்கள் உடனடியாக வருவாய்த் துறை அலுவலர்களுக்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டு, இறுதியில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு, சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியரால் ஒப்புதல் செய்யப்பட்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகள் வழங்கப்படுகின்றன.

## 2.14 விண்ணப்பங்களை முடிவு செய்தல்–கால அளவு

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்கள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு அரசு வகுத்துள்ள விதிகளின்படி 30 தினங்களுக்குள் தீர்வு காணப்படுகின்றன.

### 2.15 ஓய்வூதியதாரர்களுக்கு இதர பயன்கள்

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் மூலம் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின் போது, பெண் ஒருவருக்கு ஒரு சேலையும்/ ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும் வழங்கப்படுகிறது.

மேலும் பயனாளிகள் பின்வரும் விதிமுறைகளுக்குட்பட்டு தரமான விலையில்லா அரிசி பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

I. அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ தரமான அரிசி வழங்கப்படுகிறது.

II. அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ தரமான அரிசி வழங்கப்படுகிறது.

III. சமூகப் பாதுகாப்புத் திட்ட அனைத்து பயனாளிகளுக்கும் உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013–இன்படி, 5 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

### 2.16 விபத்து நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், அறிவிக்கப்பட்ட 44 வகையான தொழில்களில் ஈடுபடும்

வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் 18–59 வயதுக்குட்பட்ட வருவாய் ஈட்டும் பிரதான நபர், விபத்தில் மரணம் அடைந்துவிட்டால், இறந்த நபரின் வாரிசுதாரருக்கு நிவாரணமாக ரூ.20,000/– வழங்கப்படுகிறது.

காயத்தின் தன்மை மற்றும் உடல் குறைபாட்டின் அளவைப் பொறுத்து குடும்பத்தின் வருவாய் ஈட்டும் பிரதான நபருக்கு ரூ.7,500/– முதல் ரூ.15,000/– வரை நிவாரணம் வழங்கப்படுகிறது.

### 2.17 நலிந்தோர் நிவாரணத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் 18 முதல் 59 வயது வரை உள்ள வருவாய் ஈட்டும் பிரதான நபர் (ஆண் அல்லது பெண்) இயற்கை மரணம் அடைந்துவிட்டால், இறந்த நபரின் வாரிதாரருக்கு நிவாரணத் தொகையாக ரூ.20,000/– வழங்கப்படுகிறது.

### 2.18 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்

தமிழ்நாடு அரசு முனைப்புடன் பல நலத்திட்டங்களை, நமது நாட்டின் விடுதலைப்

போராட்டத்தில் பங்கெடுத்து மிகுந்த துன்பங்களை அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கென நடைமுறைபடுத்தி வருகிறது. தமிழக அரசு, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி, வேலைவாய்ப்பு மற்றும் வீடுகள் ஒதுக்கீடு செய்வது போன்ற நலத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட தியாகிகள் ஓய்வூதியத் திட்டம், விடுதலைப் போராட்ட வீரர்களின் தேசப்பற்று உணர்வை அங்கீகரிப்பதற்காக, அவர்களின் மேலான தியாகத்தைப் போற்றும் வகையில், 01.10.1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.18.1 தகுதிகள்

i. இத்திட்டத்தின் கீழ், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறை தண்டனை பெற்றவர்கள் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதியானது,

மூன்று வாரக் கால சிறைவாசம் என 01.04.1980 முதல் குறைக்கப்பட்டது.

ii. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களும், துப்பாக்கி சூட்டிலோ அல்லது விடுதலைப் போராட்டத்தின் போது காவலர் தடியடியிலோ, இறந்தவர்கள் அல்லது நிரந்தரமாக ஊனமுற்றவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர்.

iii. இத்திட்டம் 07.06.1982 முதல் கீழ்கண்ட வகையினருக்கும் நீட்டிக்கப்பட்டது:–

(அ) முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் (Ex.INA) பணியாற்றியவர்கள்.

(ஆ) 1946–ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்கள்.

(இ) மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை அடைந்தவர்களுக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது.

(ஈ) விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக அரசுப் பணியிலிருந்து பணியறவு / பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்.

(உ) விடுதலைப் போராட்டத்தின் போது தலைமறைவாக இருந்தவர்கள் மற்றும் சொத்து பறிமுதல் / பற்றுகை செய்யப்பட்டவர்கள்.

மேற்கண்ட இனங்களில் (ஈ) மற்றும் (உ) விற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களை சமர்ப்பித்தால், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

iv. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கான வருமான உச்ச வரம்பு 11.03.1983 அன்று முதல் நீக்கப்பட்டது.

### 2.18.2 குடும்ப ஓய்வூதியம்

மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு/ கணவருக்கு/ உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

மாநில அரசு ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறப்பிற்கு பிறகு மகனாயிருந்தால் 18 வயதுக்கு மேலும்,

மகளாயிருந்தால் 21 வயதுக்கு மேலும், சுயமாய் சம்பாதித்து வாழமுடியாத அளவிற்கு மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது மாற்றுத் திறனாளியாகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

### 2.18.3 ஓய்வூதியத் தொகை

விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு, அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியமானது அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது.

i. இந்த ஓய்வூதியமானது மாதம் ஒன்றிற்கு ரூ.18,000/– லிருந்து ரூ.20,000/–ஆக கடந்த 15.08.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ii. குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.9,000/–லிருந்து ரூ.10,000/– ஆக கடந்த 15.08.2022 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

### 2.18.4. சிறப்பு ஓய்வூதியம்

விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றி பெருமை பெற்றவர்களின்

தியாகத்தைப் பாராட்டி அங்கீகரிக்கும் வகையில், அவர்களது வாரிசுகளுக்கு சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஓய்வூதியமானது கடந்த 15.08.2022 முதல் ரூ.9,000/−லிருந்து ரூபாய் 10,000/−ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது.

i. சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழிதோன்றல்கள் 86 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

ii. வீரபாண்டிய கட்டபொம்மனின் வழிதோன்றல்கள் 3 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

iii. முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழிதோன்றல்கள் 49 நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

iv. சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழிதோன்றல் ஒருவருக்கும் இந்த சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட சிறப்பு ஓய்வூதியம் அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் வழங்கப்படும்.

### 2.18.5. ஏனைய சலுகைகள்

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:–

**அ) மருத்துவ வசதி**

- ஒன்றிய அரசு ஓய்வூதியமோ அல்லது மாநில அரசு ஓய்வூதியமோ அல்லது இரண்டு ஓய்வூதியங்களும் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறும் விதவைகளுக்கும் / உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மருத்துவப்படி ரு.500/–ஆக உயர்த்தப்பட்டு 15.08.2012 முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் மருத்துவ சிகிச்சைக்காக பழைய அரசு மருத்துவமனைகளுக்கு வரும்போது 'அ' வகுப்பு வசதிகளுடன் கூடிய மருத்துவ சிகிச்சையும், புதிய மருத்துவமனைகளில் கட்டணப் பிரிவுகளில் எந்தவித கட்டணமும் இல்லாமல் உயர்தர சிகிச்சையும் வழங்கப்படுகின்றன.

### ஆ) போக்குவரத்து வசதி

ஒன்றிய மற்றும் மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள், அவர்களின் விதவைகள் மற்றும் ஓய்வூதியம் பெற்று வரும் வாரிசுகளுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 60 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் பயணம் செய்யும்போது, அவர்களுடன் உதவியாளர் ஒருவருக்கு கட்டணமில்லாமல் பயணம் செய்ய இலவச பயண அட்டை அரசால் வழங்கப்பட்டுள்ளது.

### இ) வீட்டு வசதி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில் / மனைகளில் / அடுக்கு மாடி குடியிருப்புகளில், ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும், சலவையாளர்/ நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா ஒரு சதவிகிதம் வீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஈ) வேலை வாய்ப்பில் முன்னுரிமை

வேலை வாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலை வாய்ப்புக்குத் தகுதியான பெயர் பட்டியல் அனுப்பப்படும் போது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

உ) ஈமச்சடங்குச் செலவு

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச்சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூ.5000/– உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு குறையாத பதவியிலுள்ள வருவாய்த்துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின்/ ஒன்றிய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

### 2.18.6 வகைவாரியான ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை விவரம்

தற்போது, மாநில அரசு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் பல்வேறு வகையான ஓய்வூதியங்களை பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:–

**அட்டவணை 2.6**

| வ. எண் | ஓய்வூதிய வகைகள் | ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை *** |
|---|---|---|
| 1. | மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் (மாதமொன்றிற்கு ரூ.20,000/– மற்றும் ரூ.500/– மருத்துவப்படி) | 68 |
| 2. | மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/– மற்றும் ரூ.500/– மருத்துவப்படி) | 732 |
| 3. | மருது பாண்டியர் சகோதரர்களின் வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/– வீதம்) | 86 |
| 4. | வீரபாண்டிய கட்டபொம்மனின் வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/– வீதம்) | 3 |

| | | |
|---|---|---|
| 5. | முன்னாள் இராமநாதபுர மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழிதோன்றல்கள் (மாதமொன்றிற்கு ரூ.10,000/- வீதம்) | 49 |
| 6. | சுதந்திரப் போராட்ட தியாகி செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வழிதோன்றல் (மாதமொன்றிற்கு ரூ.10,000/- வீதம்) | 1 |
| 7. | ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் மாநில சுதந்திரப் போராட்டத் தியாகிகள் (ஓய்வூதியம் ரூ.500/- + மருத்துவப்படி ரூ.500/-) | 186 |
| 8. | ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் குடும்ப ஓய்வூதியம் பெறும் மாநில சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்கள் ஓய்வூதியம் (ஓய்வூதியம் ரூ.500/- + மருத்துவப்படிரூ.500/-) | 375 |
| | மொத்தம் | 1500 |

***31.01.2023-இன்படி கருவூலக் கணக்குத் துறையிடமிருந்து பெறப்பட்ட எண்ணிக்கை

2.18.7 ஒன்றிய அரசின் ஓய்வூதியத் திட்டம்

15.08.1972 முதல் ஒன்றிய அரசும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை (ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் பென்சன்) செயல்படுத்தி வருகிறது. தற்போது, ஒன்றிய அரசு இத்திட்டத்தினை "ஸ்வதந்திரதா சைனிக் சம்மான் யோஜனா" என 01.04.2017 முதல் பெயர் மாற்றம் செய்துள்ளது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:–

அ) ஒன்றிய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் தியாகிகளுக்கு ஒன்றிய அரசால் 15.08.2016 முதல் ரூ.26,000/– அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியும் சேர்த்து வழங்கப்படுகிறது. இவ்வாறு ஒன்றிய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 561 ஆகும்.

ஆ) ஒன்றிய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் / ஒன்றிய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, மாதமொன்றிற்கு ரூபாய் 500/– ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2023-2024 நிதியாண்டிற்கு ரூ.16,48,48,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.19 மக்கள் தொடர்பு முகாம்**

பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்வு காணும் நோக்குடன் ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது புதன் கிழமைகளில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையில் வருவாய்த் துறையுடன், ஊரக வளர்ச்சி, வேளாண்மை, தோட்டக்கலை, சுகாதாரம், கால்நடை , சமூக நலம் மற்றும் இதர துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் ஒரு குழுவாக சென்று மக்களின் குறைகளுக்கு தீர்வு காண்பதோடு மட்டுமல்லாமல் இதர அரசு சேவைகளும் வழங்கப்பட்டு வருவதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும். இம்முகாம்களை மேலும் பயனுள்ளதாக செயல்படுத்த, 1) தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), 2) வருவாய் கோட்ட அலுவலர், 3) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மற்றும் 4) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு

ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்று பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறுவதற்காக, முந்தைய மாதத்தின் மூன்றாவது புதன்கிழமை அன்று அனுப்பி வைக்கப்படுகிறார்கள். பெறப்பட்ட மனுக்கள் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அதன் மீதான இறுதி ஆணைகள் மக்கள் தொடர்பு முகாம் நாளன்று பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. அம்முகாம்களிலேயே முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் ஆணைகள் இதர சான்றிதழ்கள் வழங்குதல், புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் இதர அரசு நலத்திட்ட உதவிகள் அனைத்தும் தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் தொடர்பு முகாம் நடத்துதல் தொடர்பாக திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் அரசாணை (நிலை) எண்.377, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [வ.நி.3(2)] துறை, பிரிவு, நாள் 22.8.2022–இன் வாயிலாக வெளியிட்டுள்ளது.

## 2.20. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள்

மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் ஒவ்வொரு மாதமும் வருவாய்க் கோட்ட நிலை அலுவலர்களாலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித்தலைவர்களாலும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வருவாய் நிருவாக ஆணையராலும் அவர்களது குறைகளை களையும் நோக்குடன் நடத்தப்பட்டு வருகிறது.

## 2.21. வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டம் –2023

இவ்வாண்டு (2023) பொங்கல் திருநாளை முன்னிட்டு, 1.79 கோடி சேலைகளும், 1.79 கோடி வேட்டிகளும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கென 2022–2023–ஆம் நிதியாண்டில், அரசாணை (நிலை) எண்.140, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்(டி2) துறை, நாள் 09.09.2022–இல், ரூ.487.92 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.22. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

மாநிலத்தில் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களின் கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### 2.22.1 தகுதிகள் மற்றும் உறுப்பினர் பதிவு விவரம்

- விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து விவசாயத் தொழிலாளர்கள்.
- உள்ளூர் மீன்பிடி தொழில், பால்பண்ணை தொழில், தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழிப் பண்ணை மற்றும் மரங்கள் வளர்த்தல் போன்ற தொழில்கள் செய்பவர்களும் விவசாயத் தொழிலாளர்களாக கருதப்படுவார்கள்.
- 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5.00 ஏக்கர் புன்செய் அளவிற்குட்பட்ட நிலத்தை சொந்தமாக வைத்திருந்து அதில் நேரடியாக பயிர் செய்யும் சிறு/குறு விவசாயிகள் மற்றும் பயிரிடு குத்தகைதாரர்கள்.

- இத்திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 65 வயது வரையுள்ளவர்கள் முதன்மை உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள்.
- மூல உறுப்பினர்களைச் சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத குடும்ப உறுப்பினர்கள், சார்ந்து வாழும் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள்.
- இத்திட்டத்தின்கீழ் 31.03.2023 வரை பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை 2.7**

**உறுப்பினர்களின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | முதன்மை உறுப்பினர்கள் | 1,47,44,017 |
| 2 | முதன்மை உறுப்பினரைச் சார்ந்தவர்கள் | 1,35,88,380 |
| | **மொத்தம்** | **2,83,32,397** |

## 2.22.2 மூல உறுப்பினர்கள் மற்றும் சார்ந்து வாழும் உறுப்பினர்களுக்கான நலத்திட்ட உதவிகளின் விவரம்

இத்திட்டத்தில் கீழ்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:-

**அட்டவணை 2.8**

| மூல உறுப்பினர்களுக்காக | உதவித்தொகை விவரம் |
|---|---|
| 1. திருமண உதவித்தொகை | ஆண்களுக்குரூ.8,000/–<br>பெண்களுக்குரூ.10,000/– |
| 2. முதியோர் ஓய்வூதியம் | மாதம் ரூ.1000/– |
| 3. உறுப்பினர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவி<br>i. காசநோய்<br>ii. புற்றுநோய்<br>iii. எச்.ஐ.வி / எய்ட்ஸ்<br>iv. டயாலிசிஸ் (Dialysis)<br>v. கை, கால் முறிவு மற்றும் நிலை குலைவு<br>vi. நரம்பு சம்பந்தமான நோய்<br>vii. முதுகு தண்டுவடம் பாதிப்பு<br>viii. இதயநோய்<br>ix. பார்வை இழத்தல்<br>x. கல்லீரல் நோய்<br>xi. சிறுநீரக நோய்<br>xii. மனநிலை பாதிப்பு<br>xiii. அரிவாள் செல் ரத்த சோகை<br>xiv. ரத்த அழிவு சோகை<br>xv. ரத்த உறையா நோய் | மாதம் ரூ.1000/– |

| | |
|---|---|
| 4. விபத்து நிவாரணம் | மரணம் ரூ.1,00,000/– விபத்து காயங்களுக்கு ஏற்ப ரூ.20,000 முதல் ரூ.1,00,000/–வரை |
| 5. இயற்கை மரண உதவித் தொகை | ரூ.20,000/– |
| 6. ஈமச்சடங்கு செலவு | ரூ.2500/– |
| **சார்ந்து வாழும் உறுப்பினர்** | **உதவித் தொகை விவரம்** |
| 1. கல்வி உதவித் தொகை | தொழிற்பயிற்சி/ பல்தொழில் நுட்பபயிற்சி முதல் முதுநிலை தொழிற்கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,250/– முதல் ரூ.6,750/– வரை வழங்கப்படுகிறது. |
| 2. திருமண உதவித்தொகை | ஆண்களுக்கு ரூ. 8,000/–<br>பெண்களுக்கு ரூ.10,000/– |
| 3. எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த மூல உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உதவித் தொகை. | மாதம் ரூ.1,000/– வீதம் 18 வயது வரை வழங்கப்படுகிறது. |
| 4. ஈமச்சடங்கு செலவு | ரூ.2,500/– |

2.22.3 இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு

- கல்வி உதவித் தொகையினைப் பொறுத்த வரையில் அரசின் மற்ற எந்த திட்டத்தின் கீழ் கல்வி உதவி பெற்றிருப்பினும் இத்திட்டத்தின் கீழ் கல்விக்கான உதவித் தொகையினை கூடுதலாக பெறலாம்.
- இத்திட்டத்தின் கீழ் ஆண்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்கப்படுகிறது.
- பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட முதன்மை உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணமாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.
- எந்த ஒரு பதிவுபெற்ற முதன்மை உறுப்பினர் அல்லது உறுப்பினரை சார்ந்தவர்கள் இறந்தாலும் ஈமச் சடங்குக்கான நிதி உதவி ரூ.2,500/– வழங்கப்படுகிறது.
- காசநோய், புற்று நோய், எச்ஐவி / எய்ட்ஸ் மற்றும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட விவசாய உறுப்பினர்களுக்கு அவர்களின் தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.1000/– வழங்கப்படுகிறது.
- எச்ஐவி–யினால் உயிரிழந்த விவசாய உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாத உதவித் தொகை ரூ.1000/– வழங்கப்படுகிறது. (18 வயது வரை)

- மூல உறுப்பினர் இறந்த பிறகும் விவசாய உறுப்பினரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி மற்றும் திருமண உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.

**செயலாக்கம்**

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 31.03.2023 முடிய இதுவரை 34,15,774 பயனாளிகளுக்கு ரூ.2,440.02 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டில் முதலமைச்சரின் உழவர் பத்துகாப்பு திட்டத்தில் வழங்கப்பட்ட உதவி விவரங்கள் பின்வருமாறு:–

**அட்டவணை 2.9**

| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கல்வி | 9.87 | 40,107 |
| 2. | உறுப்பினர்களின் திருமணம் | 2.45 | 2,885 |
| 3. | உறுப்பினரைச் சார்ந்தவர்களின் திருமணம் | 13.05 | 14,999 |
| 4. | இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு | 100.24 | 45,866 |
| 5. | விபத்து நிவாரணம் | 11.05 | 1,090 |
| 6. | தற்காலிக உடல்திறனற்ற காலத்திற்கான மாதாந்திர உதவித்தொகை | 49.02 | 45,206 |

| வ. எண் | உதவி விவரம் | தொகை (கோடியில்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7. | எச்.ஐ.வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கான மாதாந்திர உதவித் தொகை | 0.59 | 513 |
| **மொத்தம்** | | **186.27** | **1,50,666** |

## 2.23. பேரிடர் மேலாண்மை

தமிழ்நாடு இந்திய துணைக்கண்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள நிலையில் பல்வேறு இயற்கை பேரிடர்களின் பாதிப்பிற்குள்ளாகிறது. வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் மற்றும் அரபிக் கடல் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட தமிழ்நாடு 1076 கி.மீ நீள கடற்கரையைக் கொண்டுள்ளது, இது நாட்டின் மொத்த கடற்கரை தூரத்தில் 18% மற்றும் இரண்டாவது நீளமான கடற்கரை ஆகும். மேலும், மாநிலத்தில் மாவட்டங்களில் 14 மாவட்டங்கள் கடற்கரையை கொண்டுள்ளன.

கடந்த நூற்றாண்டில், 50க்கும் மேற்பட்ட புயல்கள் தமிழக கடற்கரையையின் பல்வேறு பகுதிகளை தாக்கி உள்ளதன் மூலம், கடலோர மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு தொடர் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

புயல் தவிர, கனமழை, வெள்ளம், நிலச்சரிவு, வறட்சி, கடல் அரிப்பு மற்றும் கடல் நீர் உட்புகுதல், வெப்ப அலை, இடி மற்றும் மின்னல், தொழிற்சாலை மற்றும் இரசாயன பேரழிவுகள், தீ விபத்துகள், காட்டுத் தீ போன்றவை மாநிலத்தில் அடிக்கடி ஏற்படும் பிற பேரிடர்கள் ஆகும். மாநிலத்தின் சில பகுதிகள் நிலநடுக்கத்தின் பாதிப்பின் தன்மை கருதி வகைப்படுத்தப்பட்டுள்ள மண்டலங்களுள், மண்டலம் 2 மற்றும் 3ல் உள்ளன.

தமிழ்நாடு அரசு ஒரு முழுமையான அணுகுமுறையின் மூலம் பேரிடர்கள், அபாயம் மற்றும் பாதிப்புகள் குறித்த தரவுகள் மற்றும் வரைபடங்களை தயாரிப்பதோடு, பேரிடர் அபாயத்தை குறைத்திட தணிப்பு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. பொதுமக்களின், அபாயத்தை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்த தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழக அரசானது அனைத்து விதமான பேரிடர்களையும் திறம்பட எதிர்கொண்டு, அதன் மூலம் பேரிடர்களை எதிர்கொள்ளக்கூடிய திறன் மிக்க சமூகம், கிராமம், நகரம் மற்றும் தமிழ்நாட்டை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.

பேரிடர்களை எதிர்கொள்ளும் தமிழ்நாடு என்ற இலக்கினை அடைய முன்னெச்சரிக்கை தகவல்கள் கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் மேம்படுத்துதல் வானிலை கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் வெள்ளத் தணிப்பு திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு கவனம்

செலுத்தி வருகிறது. 1400 தானியங்கி மழை மானிகள் மற்றும் 100 தானியங்கி வானிலை நிலையங்கள் நிறுவுதல், இரண்டு டாப்ளர் வானிலை ரேடார்களை (Doppler Weather Radars) நிறுவுதல் மற்றும் மேல் அடுக்கு வானிலை கண்காணிப்பு அமைப்புகளை உருவாக்குதல் ஆகியவை தமிழ்நாடு அரசின் தடம்பதிக்கும் முயற்சிகள் ஆகும். இந்த முயற்சிகள் மாநிலத்தின் நீர்நிலை மற்றும் வானிலை கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்தும்.

## 2.24. தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் மாநிலத்தின் பேரிடர் மேலாண்மைக்கான பொறுப்பேற்றுள்ளது. இவ்வாணையம் மாநில செயற்குழு, மாநில நிவாரண ஆணையர், தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை, மாவட்ட நிருவாகம் மற்றும் முக்கியத் துறைகளின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு:

- மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்
- அரசு தலைமைச் செயலாளர்

- அரசு செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை
- அரசு செயலாளர், நிதித்துறை
- அரசு செயலாளர், உள்துறை
- அரசு செயலாளர், உயர் கல்வித் துறை
- அரசு செயலாளர், பள்ளிக் கல்வித் துறை
- மாநில நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்
- இயக்குநர், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு மையம்,
- அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
- துறைத் தலைவர், கட்டட பொறியியல் துறை, இந்திய தொழில்நுட்ப கழகம் சென்னை.

இவ்வாணையமானது, கொள்கை உருவாக்கத்திற்கான வழிகாட்டுதல், மாநில பேரிடர் மேலாண்மை திட்டம், மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் மற்றும் துறை வாரியான பேரிடர் மேலாண்மை திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், பேரிடர் அபாயக் குறைப்பு தொடர்பான அனைத்து முக்கியமான திட்டங்களையும் கண்காணித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில்

தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் 26.09.2022 அன்று நடைபெற்றது.

**2.25. மாநில செயலாக்கக் குழு**

மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு உதவிடும் வகையில், மாநில செயலாக்க குழு தமிழக அரசின் தலைமைச் செயலரின் தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, உள்துறை உள்ளிட்ட துறைகளின் செயலாளர்களை உறுப்பினர்களாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் கூட்டத்தில் வருவாய் நிர்வாக ஆணையர், நிதித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் நீர்வள ஆதாரத்துறை ஆகிய துறைகளின் செயலாளர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொள்வர்கள். மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை திட்டங்களை செயல்படுத்துவதும், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு நிதியை கையாள்வது தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதும் இக்குழுவின் முக்கிய பொறுப்பாகும். பேரிடர் காலங்களில் உடனடி நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதை இக்குழு உறுதி செய்கிறது.

## 2.26. மாநில ஆலோசனைக் குழு

மாநில ஆலோசனைக்குழு, வருவாய் நிருவாக ஆணையரைத் தலைவராகக் கொண்டும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளரை இணைத் தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கிய இக்குழு, பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு வழங்குகிறது.

## 2.27. மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையமானது, ஒன்றிய மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பான திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 2.28. தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் செயலாக்க அமைப்பாக தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை செயல்படுகிறது. இம்முகமையின் ஆட்சிமன்றக் குழுவிற்கு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் துணைத் தலைவராகவும் உள்ளனர். ஒரு துடிப்பான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளை குறைத்து, உயிரிழப்பு, பொது சொத்துக்கள் மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதம் ஆகிவற்றை தவிர்த்தல்; என்பதே தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையின் முதன்மை நோக்கமாகும்.

## 2.29. பேரழிவு அபாயக் குறைப்புக்கான உலகளாவிய மற்றும் தேசிய கட்டமைப்புகள்

சென்டாய் கூட்டமைப்பின் பேரிடர் அபாயக் குறைப்பு கோட்பாடுகள் (2015 – 2030), பருவமாற்ற ஒப்பந்தமான பாரிஸ் உடன்படிக்கை (2015), நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (2015 – 2030), பேரிடர்

அபாயக் குறைப்பு குறித்து இந்தியப் பிரதமரின் 10 அம்சத்திட்டம், தேசிய பேரிடர் மேலாண்மைத் திட்டம் 2019, ஆகியவைக்கான பேரிடர்களைக் குறைக்கும் திட்டம் . தமிழ்நாட்டின் பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள், மேற்கூறிய கோட்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இதன் மூலம் பேரிடர் அபாயத்திலிருந்து மீள் தன்மையுடைய கிராமம், நகரம், பெருநகரம் மற்றும் மாநிலம் என்ற இலக்கினை அடைய, உலகளாவிய மற்றும் தேசிய பேரிடர் அபாயக் குறைப்புக் கொள்கைகள் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக சென்டாய் கூட்டமைப்பின் பின்வரும் கோட்பாடுகளை பின்பற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

i. பேரிடர் அபாயத்தைப் புரிந்து கொள்வது
ii. பேரிடர் அபாய ஆளுமையினை மேம்படுத்துவது
iii. பேரிடர் அபாயக் குறைப்பிற்கு தேவையான முதலீடு செய்வது (கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு அல்லாத செயல்பாடுகள்)
iv. பேரிடர்களின் போது மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளுக்கான ஆயத்த நிலை, பேரிடருக்கான முன்னெச்சரிக்கை, பேரிடரின்

போது சிறந்த மீட்புப் பணி மற்றும் பேரிடருக்கு பின்னர் சிறப்பான மறுசீரமைப்பு.

## 2.30. பேரிடர் மீட்பு நடைமுறை

பேரிடர்களின் போது, பொதுமக்கள் மற்றும் அவர்களின் சொத்துக்களை பாதுகாக்க பேரிடர் மேலாண்மையின் அனைத்து பங்குதாரர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்து உடனடியாக செயல்படும் வகையில் மாநிலத்தில் பேரிடர் மீட்பு நடைமுறையை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. பேரிடர் மீட்பு நடைமுறையானது பேரிடரின் போது, அரசின் அனைத்து துறைகளையும், முகமைகளையும் செயலூக்கமுள்ள முறையான அணுகுமுறையுடனும் வழிநடத்துகிறது. உயிர் மற்றும் உடமைகளின் இழப்பைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் மாநிலத்தில் பேரிடர் மீட்பு செயல்பாடுகளை வலுப்படுத்துவதும், தரப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். மாநில அளவில், வருவாய் நிருவாக ஆணையர்/ மாநில நிவாரண ஆணையர், ஒரு பேரிடர் நிகழ்வுக்கு பேரிடர் தலைவராக செயல்படுவார், பேரிடர் மேலாண்மை இயக்குநர், துணை பேரிடர் தலைவராக செயல்படுவார். பேரிடர்களின் போது அனைத்து துறைகளும் பேரிடர் தலைவரின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும்.

பேரிடர்களின் போது, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் பேரிடர் தலைவராக செயல்படுவார்.

**2.31 பேரிடர் அபாய தகவல் தெரிவித்தல்**

பேரிடர் காலங்களில், பாதிப்பிற்குள்ளாகும் மக்களுக்கு பேரிடர் அபாயம் குறித்த தகவல்களை உரிய நேரத்தில் தெரியப்படுத்தும் ஒரு அமைப்பு முறையினை உருவாக்குவது மிக முக்கியமானதாகும். இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், மத்திய நீர்வள ஆணையம் உள்ளிட்ட அமைப்புகளிடமிருந்து பெறப்படும் கனமழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற பேரிடர்கள் குறித்தான எச்சரிக்கை தகவல்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் பெறப்படுகிறது. இத்தகவல்கள் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையத்தின் மூலம் பொதுமக்கள், மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபடும் முகமைகள் மற்றும் இதர பங்குதாரர்களுக்கும் தெரிவிக்கப் படுகிறது. மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையம் மட்டும் அல்லாமல், பேரிடர் தலைவர் அனைத்து விதமான தகவல் தொடர்பு முறைகளையும் பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களுக்கு தகவல்கள் சென்றடைய வழிவகை செய்கிறார்.

## 2.32. மாநில அவசரகால செயல்பாட்டு மையம்

மாநில அவசரகால செயல்பாட்டு மையம் வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், மத்திய நீர்வள ஆணையம் மற்றும் இந்தியாவின் புவியியல் ஆய்வு மையம், நிலஅதிர்வுக்கான தேசிய மையம் ஆகிய அமைப்புகளிடமிருந்து, மழை, புயல், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் நிலநடுக்கம் ஆகியவை குறித்தான முன்னெச்சரிக்கை தகவல்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் பெறப்படுகிறது. இத்தகவல்கள் மாவட்ட நிருவாகம், முக்கியத் துறைகள் மற்றும் பேரிடர் மேலாண்மையின் இதர பங்குதாரர்களுக்கும், ஊடகங்களுக்கும் உயர் அலுவலர்களின் அனுமதியோடு தெரிவிக்கப்படுகிறது.

பேரிடர்களின் போது, முன்னெச்சரிக்கை தகவல்களை விரைந்து அனுப்பும் பொருட்டு, மாநில மற்றும் மத்திய அமைப்புகளின் மூத்த அலுவலர்களது மேற்பார்வையில் இந்த மையம் 24 மணி நேரமும் செயல்படும். துயரில் இருக்கும் பொதுமக்கள் 1070 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் இம்மையத்தினை தொடர்பு கொள்ளலாம்.

பேரிடர் காலங்களில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் ஆகியோருடன் இணைந்து பொதுமக்களுக்கு பேரிடர் அபாயம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பொதுமக்களது பாதுகாப்பினை உறுதி செய்திட மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், ஊடகங்களின் வாயிலாக மக்களுக்கு தெரிவிப்பார்கள்.

**2.33. மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையம்**

மாவட்ட அவசரகால கட்டுப்பாட்டு மையம், மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையின் கீழ் செயல்படுகின்றது. பேரிடர் காலங்களில், மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பெறப்படும் வானிலை முன்னறிவிப்புகள்/ எச்சரிக்கைகளின் அடிப்படையில் பேரிடர் தொடர்பான தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை செயல்படுத்தும் வகையில் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள், மாவட்ட அளவிலான தகவல் தொடர்பு மையங்களாக செயல்படுகிறது. பேரிடர் காலங்களில் அனைத்து துறை மாவட்ட அலுவலர்களின் பங்களிப்போடு

24 மணி நேரமும் இம்மையம் செயல்படுகிறது. இதன் மூலம் முன்னெச்சரிக்கை தகவல்களை விரைந்து வட்டம், கிராமம் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்கும் கொண்டு சேர்க்கின்றது. இம்மையம், பேரிடர் காலங்களில், அனைத்துத் துறை அலுவலர்களை பணியில் அமர்த்தி துறை அளவிலான தேடுதல், மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை கண்காணித்து, வரப்பெற்ற அறிக்கைகளை தொகுத்து வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையருக்கு அனுப்பும் பணியில் ஈடுபடுகிறது. 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் பொதுமக்கள் இம்மையங்களை தொடர்பு கொள்ள முடியும்.

**2.34. அவசர உதவி ஆதார அமைப்பு**

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தால் அனைத்து மாநிலங்களிலும் ஒரே அவசர உதவி எண் நிறுவப்பட்டுள்ளது. தற்போது இந்த அவசர உதவி ஆதார அமைப்பு (ERSS) மூலம் பொது மக்கள் காவல் உதவி, மருத்துவ அவசர ஊர்தி, தீ விபத்து, பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான அவசர நிலைகளில் உதவி பெறுவதற்காக '112' என்ற ஒற்றை தொலைபேசி எண்ணை அழைக்கலாம்.

தற்சமயம், இந்த அவசர உதவி ஆதார அமைப்பு (ERSS), 112 உதவி எண்ணை பேரிடர் தொடர்பான உதவிக்காகவும் பயன்படுத்தும் வகையில் சேவைகளை நீட்டித்துள்ளது. இந்த விரிவாக்கத் திட்டம் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (NDMA) நிதியுதவியுடன் உயர்நிலை கணிப்பு மேம்பாட்டு மையத்தால் (Centre for Development of Advanced Computing) (C–DAC) செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தை எங்கிருந்தும் 1070 மற்றும் 112 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். உதவி கோரி வரப்பெறும் அழைப்புகளுக்கு தீர்வு காணும் வரை, தொடர்ந்து கண்காணிக்கும் வசதி கொண்ட இந்த ERSS அமைப்பானது விரைவில் செயல்பாட்டிற்கு வரவுள்ளது.

## 2.35 முன்னெச்சரிக்கை வழங்குதல்

### 2.35.1 முன்னெச்சரிக்கை வழங்கும் முகமைகள்

இந்திய வானிலை ஆய்வு மையம், மத்திய நீர்வள ஆணையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், இந்தியாவின் புவியியல் ஆய்வு மையம் மற்றும் நிலஅதிர்வுக்கான தேசிய மையம் ஆகிய அமைப்புகளிடமிருந்து, மழை, புயல், வெள்ளம், நிலச்சரிவு மற்றும் நிலநடுக்கம் ஆகியவை குறித்தான

முன்னெச்சரிக்கை தகவல்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தால் பெறப்படுகிறது. இந்த முன்னெச்சரிக்கை வழங்கும் முகமைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் முன்னெச்சரிக்கைகள் மற்றும் அறிக்கைகளை வழங்குகின்றன. பேரிடர்களின் போது நிலைமைக்கு ஏற்றவாறு இந்த கால இடைவெளி குறைக்கப்பட்டு அவ்வப்போது முன்னெச்சரிக்கை செய்திகள் வழங்கப்படுகிறது.

### 2.35.2 வானிலை முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துதல்

1400 தானியங்கி மழைமானிகள் மற்றும் 100 தானியங்கி வானிலை நிலையங்கள் நிறுவப்படுவதன் மூலம் நிகழ்நேர மழை விபரங்கள் அறிந்து, உரிய நேரத்தில் வானிலை முன்னெச்சரிக்கைகளை வழங்க இயலும். மேலும், மழை விவரத்தை கொண்டு, மழைநீர் விபரத்தின் அடிப்படையில் நீர் வரத்தை கணித்து அதற்கேற்ப அணைகளில் நீர் இருப்பினை மேலாண்மை செய்ய இயலும். இத்தகைய நெருக்கமான தானியங்கி மழைமானி மற்றும் தானியங்கி வானிலை அமைப்புகள் மூலம், கனமழையின் காரணமாக ஏற்படும் பயிர் சேதங்கள் குறித்து துல்லியமாக கணிக்க முடியும் மற்றும் வடிநிலப் பகுதிகள், வேளாண் காலநிலை பகுதிகள்

மற்றும் பயனாளர் வரையறுக்கும் பகுதிகளுக்கும் முன்னெச்சரிக்கை மற்றும் முன்னறிவிப்புகள் வழங்க இயலும்.

**2.35.3 ரேடார்கள், வானிலை பலூன்கள் மற்றும் அதிவேக கணினி நிறுவுதல்**

18.03.2022 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வானிலையை மிகச் சரியாக கணித்து உரிய முன்னெச்சரிக்கையினை பேரிடர் நிகழ்விற்கு முன்னரே வழங்கும் வகையில் வானிலை பலூன்களும், 2 ரேடார்களும், அதிவேக கணினியும் அமைக்கப்படும் என அறிவித்தார்கள்.

ரேடார்கள் மற்றும் பலூன்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்கள் மற்றும் அவற்றின் விலை மதிப்பீடு ஆகியவற்றை இறுதி செய்ய தமிழக அரசுக்கு உதவும் வகையில் இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) சிறப்பு வல்லுநர் குழுக்களை அமைத்துள்ளது. ரேடார்கள் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களை இறுதி செய்யும் பணியை மாநில அரசும் இந்திய வானிலை ஆராய்ச்சி மையமும் மேற்கொண்டு வருகிறது.

மிகவும் துல்லியமான வானிலை முன்னறிவிப்பை உருவாக்க அகமதாபாத்தில் உள்ள

விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் அதிவேக கணினி வசதி பயன்படுத்தப்படும் மற்றும் இதற்கென அகமதாபாத்தில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி மையத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவுள்ளது.

### 2.35.4 தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மை தரவுதளம்

தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள புவிசார் தகவல் மையம், தேசிய அவசரநிலை மேலாண்மை தரவுதளத்தை, மாநில அளவில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மை தரவுதளத்தை உருவாக்கியுள்ளது. அவசர மேலாண்மை தரவுகளை சேகரிப்பதற்கென வடிவமைக்கப்பட்டுள்ள செயலி மூலம் மாவட்ட அளவில் பல்வேறு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. பேரிடர் மேலாண்மைக்கான கட்டமைப்புகள் / உபகரணங்கள் / ஆதாரங்களின் விபரங்களை கொண்ட 76 புவிசார் தகவல் அடுக்குகளை தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மை தரவுதளம் கொண்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை, அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலையுணர்வு மையம் மற்றும் சென்னை தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து பேரிடர் தரவு தளத்தை விரிவுபடுத்தல், வளப்படுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகி றன. பேரிடர் பாதித்த பகுதிகளுக்கு தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் பொருட்களை ஏற்பாடு செய்யும்போது, தமிழ்நாடு மாநில அவசரநிலை மேலாண்மை தரவுதளத்தின் புவிசார் ஆய்வின் மூலம் தேவையான பொருட்களின் அருகாமை மற்றும் இருப்பினை அரசு அலுவலர்கள் அறிந்து நகர்வு செய்ய முடியும். மேலும், சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தால் (IIT–M) உருவாக்கப்பட்டுள்ள புயல் சீற்ற மாதிரியும் மாநில அவசர மேலாண்மை தரவு தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது, இது வெள்ளம் குறித்த முன்னெச்சரிக்கையை வழங்குவதோடு, பேரிடர் காலங்களில் தேவையான தளவாடங்கள் மற்றும் தகவல்களை திரட்டவும் உதவுகிறது.

## 2.35.5 ஆளில்லா வானூர்தி மூலம் வெள்ளநிலை குறித்த வான்வழி புகைப்படம்

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி, ஆற்று வழிகள் மற்றும் இடையகப் பகுதிகளை ஆளில்லா வானூர்தி மூலம் வெள்ளநிலை குறித்த வான்வழி புகைப்படம் எடுக்கும் பணி, அண்ணா பல்கலைக்கழகத்தின், சென்னை தொழில் நுட்ப கழக கல்லூரியில் உள்ள வான்வெளி ஆராய்ச்சி மையம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 19 மாவட்டங்களில் 5650.45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு பகுதிகளில் வான்வழிப் புகைப்படம் எடுக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்த புகைப்படங்களானது இலக்க முறை பரப்பு அமைப்பு (Digital Surface Model), இலக்க முறை நிலப்பரப்பு / இலக்க முறை நிலமட்ட அமைப்பு (Digital Terrain Model / Digital Elevation Model) ஆக மாற்றம் செய்து புவிசார் தகவல் அமைப்பு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த இலக்க முறை பரப்பு அமைப்பானது (Digital Surface Model), வானிலை முன்னறிவிப்பின் அடிப்படையில், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதியின் உண்மை நிலையினையும், அப்பகுதியில் ஏற்படக்கூடிய வெள்ள அபாயத்தின் அளவீடுகளையும்

வழங்கும். இந்த அமைப்பின் முடிவுகள் வெள்ள அபாயத்தினை எதிர்கொள்ள திட்டமிடுவதற்கும், முன்கூட்டியே மீட்பு படையினை நிலைநிறுத்தவும், தேவையான உபகரணங்கள் மற்றும் இதர பொருட்களை திரட்டவும் பயன்படுத்தப்படுவதோடு, முன்னுரிமை அடிப்படையில் வெள்ளத் தணிப்பு பணிகள் மேற்கொள்ளவும் வழிவகுக்கும்.

### 2.35.6 சென்னை நகருக்கான அறிவுத்திறன்சார் வெள்ள அபாய எச்சரிக்கை அமைப்பு

தேசிய கடலோர ஆராய்ச்சி மையம், சென்னை நகருக்கான அறிவுத்திறன்சார் வெள்ள அபாய எச்சரிக்கை அமைப்பினை உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பு கடந்த கால வானிலை தரவு, நிகழ்நேர வானிலை முன்னறிவிப்பு, மற்றும் நீராற்பகுப்பு மாதிரி ஆகியவற்றின் அடிப்படையில் சென்னை மாநகராட்சி பகுதி முழுவதுக்கும் i–FLOWS–ஐ உருவாக்கியுள்ளது. இந்த அமைப்பு கடந்த கால வானிலை தரவுகளின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளுக்கும் வெள்ளத்தின் தீவிரம் மற்றும் தாக்கம் தொடர்பான 80 நிலையான சூழல்களை உருவாக்கி வைத்துள்ளது. மேலும், வெள்ளம் ஏற்படக் கூடிய நிலையில் கடந்த கால வானிலை தரவுகள்,

நிகழ்நேர வானிலை முன்னறிவிப்பு மற்றும் அலை எழுச்சி ஆகியவற்றை i–FLOWS மாதிரியில் உள்ளீடு செய்து, வெள்ளம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ள மாநகராட்சி வார்டுகள் மற்றும் பகுதிகள், வெள்ளத்தின் ஆழம் குறித்த தகவல்களை உடனுக்குடன் பெற முடியும். இம்மாதிரி, வார்டு வாரியாகவும் / தெரு வாரியாகவும், வெள்ள பாதிப்பின் அளவை இரண்டு மற்றும் முப்பரிமான வடிவில் வழங்குவதோடு, வெள்ளத்தின் காரணமாக பாதிப்பிற்குள்ளாகக் கூடிய முக்கியம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் பட்டியலையும் அளிக்கிறது. கணிக்கப்பட்ட வெள்ள அபாயத்தை பகுப்பாய்வு செய்யவும், உண்மை கள நிலையை அறிக்கை செய்யவும் இதில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த மாதிரியின் கணிப்பினை துல்லியமாக்கும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் அண்மை காலத்தில் அமைக்கப்பட்டுள்ள மழை நீர் வடிகால்கள் முக்கிய உள்ளீடாக எடுத்துக் கொள்ளப்படும். 2022 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது தேசிய கடலோர ஆராய்ச்சி மையத்தின் (NCCR) உதவியுடன் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் i–Flows

பயன்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு TNSMART இல் ஒருங்கிணைக்கப்பட உள்ளது.

### 2.35.7 சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம்சார் முடிவுகள் மேற்கொள்ள உதவும் அமைப்பு

தமிழ்நாடு நிலையான நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அங்கமாக, சென்னை வடிநிலப் பகுதிகளான அடையாறு, கூவம், கொசஸ்தலையார் மற்றும் கோவளம் பகுதிகளுக்கு "நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம்சார் முடிவுகள் மேற்கொள்ள உதவும் அமைப்பு (RTFF & SDSS)" ஒன்றை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இணையவழி அடிப்படையிலான நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பும், ஏரி மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் மேலாண்மை செய்வதற்காக வழிகாட்டுதல்களும் பெறப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஆலோசகர்கள் மூலம் திட்ட அறிக்கை தயார் செய்ய தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச் சேவைகள் (TNUIFSL) நிறுவனத்தின் திட்ட மேம்பாட்டு மானிய நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வருவாய் நிர்வாக ஆணையரால் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு

ரூ.71.22 கோடி ஆகும். இத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் செப்டம்பர் 2022ல் முடிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இத்திட்டம் செயலாக்க நிலையில் உள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 86 தானியங்கி மழை மானிகள், 14 தானியங்கி வானிலை நிலையங்கள், 149 தானியங்கி நீர் நிலை அளவீட்டு கருவிகள் மற்றும் 80 மதகுகளில் நீர் உணர்விகள் நிறுவப்பட்டு இதன் மூலம் நிகழ்நேர அடிப்படையில் நீர் மற்றும் வானிலை தரவுகளை பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் 4,974 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள சென்னை வடிநிலப் பகுதிகளை, இந்திய நில அளவை நிறுவனம் ஆளில்லா விமானம் மூலம் அளவீடு மற்றும் புகைப்படம் எடுத்து வருகிறது. இந்த ஆளில்லா விமானம் மூலம் எடுக்கப்படும் புகைப்படங்கள் 20 செ.மீ. உயரம் கொண்ட துல்லியமான இலக்கமுறை உயர மாதிரிகள் தயாரிக்க பயன்படுத்தப்படும். தற்போது சென்னையில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஒரு தற்காலிக வெள்ள அபாய கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது. இந்த மையம்,

தேசிய நடுத்தர கால வானிலை முன்னறிவிப்பு மையத்தின் (NCMRWF) வானிலை மாதிரிகள் மற்றும் பல்வேறு துறைகளின் மழை தரவுகள் அடிப்படையில் வெள்ள முன்னறிவிப்பையும், சென்னை வடிநிலப்பகுதிகளுக்கான ஆலோசனைகளையும் வழங்குகிறது. சென்னை நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடம்சார் முடிவுகள் மேற்கொள்ள உதவும் அமைப்பின் முடிவுகள் 2022 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் ஒப்பாய்வு செய்யப்பட்டது.

### 2.35.8. மாநில மற்றும் மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம்

மாநில அளவிலான வறட்சி கண்காணிப்பு மையம், இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய தொலையுணர்வு மையம், தேசிய பயிர் நிலவரங்கள் முன்கணிப்பு மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், மாநில நீர்வள ஆதார மையம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகியவற்றின் உள்ளீடுகளை பெற்று, மாநில அளவில் வறட்சி நிலையை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த 2022–ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை காலத்தில் முறையே 45% மற்றும் 1% கூடுதலாக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது. மாநில நீர்வளத் துறையின் நிலத்தடி நீர் மட்ட ஆய்வுகளின் படி, டிசம்பர் 2022 அனைத்து மாவட்டங்களிலும் நீர்மட்டம் உயர்ந்துள்ளதோடு, திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு பகுதியில் மட்டும் குறைந்த அளவில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. மாவட்ட அளவிலான வறட்சி கண்காணிப்பு மையமானது மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஒரு அங்கமாக செயல்படும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையமானது மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, அவரது கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

## 2.36 முன்னெச்சரிக்கை தகவலினை பரப்புதல்

### 2.36.1 முன்னெச்சரிக்கை அமைப்பு

1076 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தமிழகக் கடற்கரையானது புயல், கனமழை, வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற பல்வேறு பேரிடர்களால் பாதிப்பிறிகுள்ளாகக் கூடியது ஆகும். எனவே 14 மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் 424

முன்னெச்சரிக்கை அமைப்பு (EWS) நிறுவப்பட்டுள்ளது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பில் சைரன் ஒலி அல்லது நேரலை அல்லது பதிவு செய்யப்பட்ட எச்சரிக்கை தகவல்களை; ஒரு குறிப்பிட்ட பகுதி, வட்டம், மாவட்டம் அல்லது அனைத்து இடங்களுக்கும் ஒளிபரப்பும் வசதி உள்ளது. இந்த முன்னெச்சரிக்கை அமைப்பானது GPS/GPRS அல்லது செயற்கைக்கோள் அடிப்படையிலான தகவல் பரிமாற்றம் செய்கிறது. இந்த அமைப்பு 2 கிமீ சுற்றளவிற்கு தகவல் சேர்க்கும் திறன் கொண்டுள்ளது. மேலும், பேரிடர் அபாயம் குறித்து, பொதுமக்கள், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு இந்த எச்சரிக்கை அமைப்பில் முன்பதிவு செய்யப்பட்டுள்ள தொலைபேசி எண்கள் மூலம் தெரிவிக்கும் வசதியும் உள்ளது. இந்த அமைப்பு தமிழ்நாட்டின் கடை கோடி பகுதிகளில் வசிக்கும் மக்களின் தகவல் இணைப்பை உறுதி செய்கிறது. இந்த அமைப்பு மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து முழுமையாக கண்காணிக்கப்பட்டு இயக்கப்படுகிறது. மாண்டஸ் புயலின் போது, பதிவு செய்யப்பட்ட மற்றும்

நேரலை எச்சரிக்கை செய்திகள் மீனவர்களுக்கும் மற்றும் கடலோர குடியிருப்புகளுக்கும் மணிக்கு ஒருமுறை முன்னெச்சரிக்கை அமைப்பின் மூலம் ஒலிபரப்பப்பட்டது.

### 2.36.2 பல்வேறு பேரிடர்களின் தாக்கத்தினை முன்னறிந்து அவசர மீட்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படும் திட்டம்

வானிலை முன்னறிவிப்புகளை பெறுதல், அவசரகால முடிவுகள் மேற்கொள்ள உதவுதல் மற்றும் முன்னெச்சரிக்கை தகவல்களை பரப்புதல் என அனைத்திற்கும் TNSMART ஒரே தீர்வாகும். TNSMART இணையவழி மற்றும் கைபேசி செயலி மூலம் செயல்படும். TNSMART பாங்காக்கில் இருக்கும் 'ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு அமைப்புடன்' (RIMES– Regional Integrated Multi Hazard Early Warning System) ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. TNSMART கைபேசி செயலியை தற்போது 2,53,467– க்கும் மேற்பட்ட பயனாளர்கள் பயன்படுத்துகின்றனர். இச்செயலி முழுமையாக அலுவலக பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த ஏதுவாகவும் உள்ளது. இந்த கைபேசி செயலியின் மூலம் பொதுமக்கள் பேரிடர் துயர் குறித்த

தகவல்களை அரசு அலுவலர்களுக்கு அனுப்பி உதவி பெற முடியும். இதுமட்டுமின்றி, பேரிடர் காலங்களில் புகைப்படங்கள் மற்றும் காணொலியை அனுப்பவும் இந்த செயலியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 2.36.3 பேரிடர் மேலாண்மைக்கான பொதுவான எச்சரிக்கை நெறிமுறை

பேரிடர் காலங்களில், உயிர் சேதம் மற்றும் பொருள் சேதம் ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை தகவல்களை அதிகப்படியான நபர்களுக்கு மிக விரைவாக அனுப்புவது அவசியமாகிறது. பேரிடர் தொடர்பான எச்சரிச்கை தகவல்களை அளிக்கும் இந்திய வானிலை ஆய்வு மையம், இந்திய நீர்வள ஆணையம், இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம், பாதுகாப்பு புவியியல் தகவல் ஆராய்ச்சி நிறுவனம், இந்திய வன ஆய்வு நிறுவனம்; பேரிடர் முன்னெச்சரிக்கை மீது முடிவெடுக்கும் அல்லது உறுதிபடுத்தும் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்கள்; மற்றும் எச்சரிக்கை தகவல்களை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அமைப்புகளான தொலைபேசி சேவை, DTH நிறுவனங்கள், பொது அறிவிக்கை அமைப்புகள், அச்சு, காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றை

இந்த பொதுவான எச்சரிக்கை நெறிமுறை ஒரு பொதுவான இணையத்தளத்தில் ஒருங்கிணைக்கிறது.

பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பானது இணையவழி புவிசார் அமைப்பை (Web GIS) அடிப்படையாகக் கொண்டு செயல்படுவதோடு, ஒரு குறிப்பட்ட புவிசார் பகுதியில் உள்ள அனைத்து கைபேசி பயனர்களுக்கும் எச்சரிக்கைச் செய்திகளை அனுப்ப உதவுகிறது. எச்சரிக்கை தகவல்களை வழங்கும் முகமைகளால் எச்சரிக்கை தகவல்கள், பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பு இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு, மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தால், களநிலை மற்றும் அவசியத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு, முன்னெச்சரிக்கை தகவல்கள் பரப்பப்படுகிறது. இந்த பொதுவான எச்சரிக்கை நெறிமுறை அமைப்பினை பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைக் காலத்தில் 1.71 கோடி நபர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக முன்னெச்சரிக்கை செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

### 2.36.4. VHF, செயற்கைக்கோள் தொலைபேசிகள் NAVTEX மற்றும் NavIC

தடையற்ற தகவல் பரிமாற்றத்தை உறுதி செய்வதற்காக, VHF கருவிகள் (செல்லிடம் மற்றும் நிலையானது) மாவட்ட ஆட்சியர்கள், வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பேரிடர்களின் போது தடையற்ற தகவல்தொடர்பை உறுதி செய்வதற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்களுக்கு செயற்கைக்கோள் தொலைபேசிகள், தேசிய புயல் அபாயக் குறைப்புத் திட்டம் (NCRMP) மற்றும் கடலோரப் பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தின் (CDRRP) கீழ் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர், காவல்துறை உயர் அலுவலர்கள், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கும் செயற்கைக்கோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளது.

வானிலை எச்சரிக்கைகள், முன்னறிவிப்புகள் மற்றும் அவசர கடல் பாதுகாப்பு தகவல்களை தெரிவிக்க, கடலோர மாவட்ட நிர்வாகத்திற்கும்,

ஆழ்கடலில் குழுக்களாக மீன்பிடிக்க செல்லும் மீனவர்களுக்கும், செயற்கைக்கோள் மூலம் இயங்கும் NavIC, NAVTEX தொலைதொடர்பு கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆழ் கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களின் உயர்மட்ட பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, GPS ரிசீவர்கள் பொருத்திய 18,555 கையடக்க VHF வானொலி கருவிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 2.36.5. சமூக ஊடகம்

தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையின் போது இணைய வசதி பெற்றுள்ள கணிசமான மக்களுக்கு முன்னெச்சரிக்கை தகவல்களை உடனடியாக கொண்டு செல்லும் நோக்கத்தில் ட்விட்டர், முகநூல், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. இந்திய வானிலை மையம் மற்றும் இந்திய தேசிய கடல்சார் தகவல் மையம் ஆகியற்றிலிருந்து மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் பெறப்படும் வானிலை முன்னறிவிப்புகள், எச்சரிக்கை செய்திகள் சமூக ஊடகங்கள் மூலம் கால தாமதமின்றி தெரிவிக்கப்பட்டது. புயல், மின்னல், வெள்ளம்,

ஆறுகளில் உபரி நீர் வெளியேற்றம் போன்றவை தொடர்பான எச்சரிக்கைகளும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் தெரியப்படுத்தப்பட்டன. பேரிடர் காலங்களில் 24 மணி நேரமும் சமூக ஊடகங்களை கையாளுவதற்கு தனியாக ஒரு மூத்த அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். பேரிடர் மேலாண்மை தொடர்பான அனைத்து அரசு செய்திக்குறிப்புகள் சமூக ஊடகங்களில் வெளியிடப்படுவதால், பேரிடர் மேலாண்மையில் மாநில அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளது.

## 2.37 பேரிடர் மீட்பு

### 2.37.1. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை

இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படும் பேரிடர்களின் போது தேடல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைக் திறம்பட மேற்கொள்வதற்காக "தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை (TNDRF)" அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினருக்கு தேசிய பேரிடர் மீட்புப் படையினரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையை (TNDRF) வலுப்படுத்தும் நோக்கில் அதிநவீன உபகரணங்களை

வாங்குவதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் செயல் திறன்களை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, 2022-2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படைக்கு வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூ.2.31 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**2.37.2 தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் படை முதல் நிலை மீட்புப் படையாக செயல்பட்டு வருகிறது. பேரிடர்களின் போது, நவீன தேடல் மற்றும் மீட்பு உபகரணங்களைக் கொண்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையானது அர்ப்பணிப்போடு, பாதிப்பிற்குள்ளாகும் மக்களை முன்கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பது, தேடுதல், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் திறனை வலுப்படுத்தும் வகையில், தண்ணீர் தெளிப்பான்கள், அவசரகால மீட்பு வாகனங்கள், சுவாசக் கருவிகள் ஆகிய உபகரணங்கள் வாங்குவதற்கும், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காகவும் 2022–23 ஆம் ஆண்டு ரூ.15.21 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதோடு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

### 2.37.3 ஆப்த மித்ரா – 5500 சமூக தன்னார்வலர்களின் பயிற்சி

மேம்படுத்தப்பட்ட ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ், பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் 16 மாவட்டங்களான கடலூர், கன்னியாகுமரி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், நீலகிரி, தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, திருவண்ணாமலை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில், தன்னார்வலர்களுக்கு 12 நாட்கள் பயிற்சி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு பேரிடர்களின் போது மேற்கொள்ள

வேண்டிய தகவல் பரிமாற்றம், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள், முதலுதவி போன்ற திறன்கள் குறித்து இதுவரை 5,500 சமூக தன்னார்வலர்களுக்கு இரண்டு கட்டங்களாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த சமூக தன்னார்வலர்கள் பேரிடர் காலத்தில் கள நிலை குறித்து முதல் தகவல் தெரிவிப்பவர்களாகவும், பேரிடர் ஏற்படும் இடத்தில் மீட்புப் படையினருக்கு உறுதுணையாகவும் செயல்படுவார்கள். மேலும், இந்த தன்னார்வலர்களை பேரிடர் மேலாண்மை பயிற்சியில் பயிற்சியாளர்களாகவும் பயன்படுத்த இயலும்.

### 2.37.4. 65,000 முதல் நிலை மீட்பாளர்களுக்கான பயிற்சி

பேரிடர் மேலாண்மையில் சமூகத்தின் பங்களிப்பை அதிகரிக்கவும், பயனுள்ள சமூகப் பேரிடர் மீட்புப் படையை உருவாக்கவும், 14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் குடியிருப்பு அளவிலான 65,000 தன்னார்வலர்கள் கண்டறியப்பட்டு, மூன்று நிலைகளில் (மாவட்டம், வட்டம் மற்றும் குறுவட்ட அளவிலான) 3 நாள் முதல் நிலை மீட்பாளர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பேரிடர்களின் போது எந்த ஒரு சூழ்நிலையையும் சமூகத்தினால் திறமையாக எதிர் கொள்ளமுடியும்.

**2.37.5. பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பங்குதாரர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி**

பேரிடர் காலங்களில் பெறும் பங்கு வகிக்கும் பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பங்குதாரர்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் திறன் மேம்பாடு பயிற்சி வழங்க அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரிக்கு ரூ.60 இலட்சம் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.38 வானிலை நிகழ்வுகளின் மேலாண்மை**

**2.38.1 மயிலாடுதுறை மாவட்டத்தில் கனமழை–நவம்பர் 2022**

இந்திய வானிலை ஆய்வு மையம், 9.11.2022 அன்று நாளிட்ட அறிவிக்கையில், தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதை ஒட்டிய மத்திய இந்தியப் பெருங்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளதாகவும், இதன் காரணமாக பல மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் எனத் தெரிவித்திருந்தது.

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, மாநிலத்தின் பல மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்தது. குறிப்பாக மயிலாடுதுறை மாவட்டத்தில்

10.11.2022 முதல் 11.11.2022 வரை 1198% அளவில், அதிகனமழை பதிவாகியுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. சீர்காழி, கொள்ளிடம், தரங்கம்பாடி பகுதியில் 2700 கனஅடி நீரை கடத்தும் அளவிலான கழுமலையாறு மற்றும் வெள்ளப்பள்ளம் உப்பனாறு வடிகால்கள் உள்ளன. ஆனால், கனமழை மற்றும் மிகக் கனமழையின் காரணமாக இவ்வடிகால்களில் 25000 கனஅடி அளவு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டு, குடியிரு கள் வெள்ளத்தில் மூழ்கின. இவ்வட்டங்களில் உள்ள மொத்தம் 677 குடியிருப்புகளில், 489 குடியிருப்புகள் முழுமையாகவும், 188 குடியிருப்புகள் பகுதியாகவும் வெள்ளத்தில் மூழ்கியதால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குடிசைகள், ஓட்டு வீடுகள், மின் உள்கட்டமைப்புகள், வேளாண் மற்றும் தோட்டக்கலை

பயிர்கள் சேதமடைந்ததோடு மனித உயிர் இழப்புகள், காயங்கள் மற்றும் கால்நடை இறப்புகளும் ஏற்பட்டன. 20,196 குடும்பங்களைச் சேர்ந்த 57,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதிகள் மற்றும் பிற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. மேலும், 09.11.2022 முதல் கடல் சீற்றம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதுடன், மீன்பிடித் தளத்தில் இருந்த இரண்டு படகுகளும் சேதமடைந்தன. இப்பெரு மழையால் மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை முடங்கியதோடு சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாக ஆய்வு மேற்கொண்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார். மேலும், நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி, மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்ட 1,61,647 குடும்பங்களுக்கு ரூ.1000/–வீதம் நிவாரணம் வழங்க அரசால் ரூ.16.1647 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண தொகை வழங்கப்பட்டது. மேலும், கனமழை மற்றும் மிக அதிக கனமழையினால் மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் சில மாவட்டங்களில் 38,155 ஹெக்டேர் பரப்பளவில்

பயிர்கள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட 49,681 விவசாயிகளுக்கு இடுபொருள் மானியமாக ரூ.51.42 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரண தொகை வழங்கப்பட்டது.

**2.39 மாண்டஸ் புயல், டிசம்பர் 2022**

**2.39.1 முன் உணர்த்தல்**

உயிரிழப்பை குறைப்பதற்காக 9 மாவட்டங்களில் உள்ள 205 தங்குமிடங்களில் 9,280 பேர் (3,247 ஆண்கள், 3,928 பெண்கள், 3,222 குடும்பங்களைச் சேர்ந்த 2105 குழந்தைகள்) முன்கூட்டிய தங்க வைக்கப்பட்டனர்.

**2.39.2 மாண்டஸ் புயலின் தாக்கம்**

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் 501 கிராமங்களில் வசிக்கும் 70,95,114 மக்கள் புயலின் காரணமாக பாதிப்புக்குள்ளாயினர். மேலும், 6736.21 ஹெக்டேர் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டது. பலத்த காற்றின் தாக்கத்தால் 3,066 மரங்கள் சாய்ந்தன, 1,134 மின்கம்பங்கள், 28,440 கிமீ நீளமுள்ள மின்கடத்திகள், 73 மின்மாற்றிகள், 10 துணை மின்நிலையங்கள் சேதமடைந்தன. மீனவர்களின் 37 ஃபைபர் படகுகள்

(6–முழுமையாகவும், 31 பகுதியாகவும்), 212 இயந்திர படகுகள் (76 முழுமையாகவும், 136 பகுதியாகவும்) மற்றும் 932 மீன்பிடி வலைகள் சேதமடைந்தன. இப்புயலின் காரணமாக 5 மனித உயிரிழப்புகள் ஏற்பட்டன.

மாண்டஸ் புயலின் காரணமாக 23 மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளான 6736 ஹெக்டேர் பரப்பளவிலான வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு, 13,141 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.9 கோடி நிவாரணம் வழங்க மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்டஸ் புயலின் காரணமாக சேதமடைந்த மின் உட்கட்டமைப்புகளை சீரமைப்பதற்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாண்டஸ் புயலின் போது சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் ரூ.4.67 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசால் எடுக்கப்பட்ட அசாதாரண முயற்சி மற்றும் உடனடி நடவடிக்கையின் அடிப்படையில், மாண்டஸ் புயலின் போது மனித உயிர்கள் மற்றும் பிற சேதங்கள் வெகுவாக குறைக்கப்பட்டது. நிவாரணப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, போக்குவரத்து, மின்விநியோகம் ஆகிய சேவைகள் மிக விரைவாக சீரமைக்கப்பட்டு, 48 மணி நேரத்திற்குள் இயல்பு நிலை திரும்பியது.



2.39.3 பருவம் தவறிய மழை – ஜனவரி – பிப்ரவரி –2023

29.01.2023 அன்று வங்கக்கடலில் உருவான காற்றழுத்ததாழ்வு மண்டலம் காரணமாக டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், தஞ்சாவூர்,

திருவாரூர், மயிலாடுதுறை, அரியலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 30.01.2023 முதல் 03.02.2023 வரை கனமழை பொழிவு ஏற்பட்டது. இதன் காரணமாக 93,873,73 ஹெக்டேர் பரப்பளவில் வேளாண் பயிர்கள் சேதமடைந்தன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பாதிப்பிற்குள்ளான 1,33,907 விவசாயிகளுக்கு ரூ.112.72 கோடி நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.40 பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகள்

பெருநகர சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில், வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு அமைக்கப்பட்ட வெள்ள ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில், வெள்ள தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனரகத்துக்கு ரூ.373.50 கோடி மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.41 பேரிடர் மேலாண்மை நிதியளிப்பு

பேரிடர் மேலாண்மை நிதியளிப்பானது, நிவாரணத்தை மையமாகக் கொண்ட அணுகுமுறையிலிருந்து தற்பொழுது தடுப்பு, தயார்நிலை மற்றும் தணிப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, ஒரு முன்னுதாரண மாற்றத்தை அடைந்துள்ளது. மேலும், இதன்மூலம் அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்புடன் பேரிடர் தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகள், அரசின் அனைத்து வளர்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15–ஆவது நிதிக் குழுவின் பரிந்துரை–களின்படி, ஒன்றிய அரசு மாநில பேரிடர் நிவாரண நிதியினை, மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதி என மறுசீரமைத்துள்ளது. மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியினை மாநில பேரிடர் நிவாரண நிதி, மாநில பேரிடர் தணிப்பு நிதி என இரண்டு முக்கிய

கூறுகளாக பிரித்து பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

| நிதி ஒதுக்கீட்டின் வகைகள் | நிதி ஒதுக்கீட்டின் சதவீதம் |
|---|---|
| **I மாநில பேரிடர் நிவாரண நிதி** | |
| i) மீட்பு மற்றும் நிவாரணம் | 40% |
| ii) மறுசீரமைப்பு | 30% |
| iii) ஆயத்த நிலை மற்றும் திறன் மேம்பாடு | 10% |
| **II மாநில பேரிடர் தணிப்பு நிதி** | 20% |
| **மொத்தம்** | **100%** |

தமிழ்நாடு அரசு, பேரிடர் தணிப்பு திட்டங்களை மேற்கொள்வதற்காக, மாநில பேரிடர் தணிப்பு நிதியை உருவாக்கியுள்ளது, இதுதொடர்பாக தேவையான வழிகாட்டுதல்கள், அரசால் வெளியிடப்பட்டுள்ளன. சமூக மற்றும் உள்ளூர் அமைப்புகளின் பங்கேற்கும் பேரிடர்களின் அபாயக் குறைப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு திட்டங்களுக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து நிதி அளிக்கப்படுகிறது. இருப்பினும் கடற்கரை தடுப்பு சுவர்கள், வெள்ள தடுப்பு கரைகள், வறட்சி மீள் நடவடிக்கைகள் போன்ற பெரிய அளவிலான தணிப்பு நடவடிக்கைகள் வழக்கமான

வளர்ச்சி திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.

மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில பேரிடர் தணிப்பு நிதியின் நிதியளிப்பு இனங்கள் ஒன்றுக்கொன்று மாறக்கூடியவை அல்ல என்றாலும், அந்தந்த நிதிகளின் துணைச் சாளரங்களுக்குள் நெகிழ்வுத்தன்மை மற்றும் மறு ஒதுக்கீடு செய்யப்படலாம். அத்தகைய மறு ஒதுக்கீடு அந்த துணை சாளரத்தின் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 10 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டிற்கு மாநில பேரிடர் அபாய மேலாண்மை நிதியின் கீழ் ஆண்டு வாரியான நிதி ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:–

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (கோடியில்) |
|---|---|
| 2021 – 22 | 1360.00 |
| 2022 – 23 | 1428.00 |
| 2023 – 24 | 1500.00 |
| 2024 – 25 | 1575.00 |
| 2025 – 26 | 1653.00 |
| **மொத்தம்** | **7516.00** |

**2.41.1. தேசிய பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் பிரத்யேக ஒதுக்கீடு**

**2.41.1.1 தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் நகர்புற வெள்ள அபாயக் குறைப்பு**

15–ஆவது நிதி குழு பரிந்துரையின்படி, நாட்டில் உள்ள அதிக மக்கள் தொகை கொண்ட 7 நகரங்களில் நகர்புற வெள்ள அபாயத்தினை குறைக்க ரூ.2,500 கோடி தேசிய பேரிடர் தணிப்பு நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.100 கோடி வீதம் 2021–26 வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியினை பெறுவதற்கு ரூ.304.51 கோடி ரூபாய்க்கான முன்மொழிவுகள் உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**2.41.1.2 தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து மிகவும் வறட்சியால் பாதிக்கப்படும் பன்னிரண்டு மாநிலங்களுக்கு ஊக்க உதவி**

தமிழ்நாட்டில் வறட்சி தணிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 கோடி

வீதம் 5 ஆண்டுகளுக்கு இந்நிதியினை பெறுவதற்கு வறட்சி மேலாண்மை திட்ட முன்மொழிவுகள் தயாரித்து உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2.41.1.3 – 2026–க்கு பின்னர்

15–ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைகள் 2021–26–ஆம் ஆண்டு வரை மட்டுமே செல்லத்தக்க நிலையில், தமிழ்நாடு அரசு பேரிடர் மேலாண்மைக்கான, குறிப்பாக பேரிடர் தணிப்புக்கான சிறப்பான நிதி ஆதரவை 2026–ஆம் ஆண்டுக்கு பின்னரும் தொடர்ந்து ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தும்.

**2.42 தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை**

பேரிடர் மேலாண்மையின் அனைத்து அம்சங்களை உள்ளடக்கி தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கையை தமிழக அரசு மேம்படுத்தி வெளியிட்டுள்ளது. இந்த கொள்கையில் நிறுவன மற்றும் நிதி ஏற்பாடுகள், பேரிடர் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு, திறன் மேம்பாடு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து அரசின் கொள்கை விளக்கப்பட்டுள்ளது.

ஒரு துடிப்பான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளை குறைத்து, உயிரிழப்பு, பொது சொத்துக்கள் மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதம் ஆகிவற்றை தவிர்த்தல்; அரசு உருவாக்கிய பொருளாதார மற்றும் வளர்ச்சி ஆதாயங்களை இழக்காது இருத்தல் என்பதே தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கையின் நோக்கமாகும்.

## 2.43 பேரிடர் மேலாண்மை திட்டமிடல்

பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 பிரிவு 23(1)–ன் படி தமிழ்நாடு அரசு, 2023–ம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டத்தை வெளியிட்டுள்ளது. பேரிடர் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு, திறன் மேம்பாடு தொடர்பான செயல்பாடுகள் இத்திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான பரிந்துரைகளும் இத்திட்டத்தில் உள்ளது. மேலும், அனைத்து மாவட்டங்களும் 2022 – ஆம் ஆண்டுக்கான மாவட்ட பேரிடர் மேலாண்மைத் திட்டத்தினை வகுத்துள்ளன.

## 2.44 பேரிடர் மேலாண்மைக்கான நிலையான வழிகாட்டு நடைமுறை

இயற்கை / இதர பேரிடர்களின் போது மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம், அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் வெளியிடப்பட்ட பேரிடர் மேலாண்மைக்கான நிலையான வழிகாட்டு நடைமுறையில் விவரிக்கப்பட்டுள்ளது. பேரிடர் மேலாண்மைக்கான நிலையான வழிகாட்டு நடைமுறையில் ஒவ்வொரு பேரிடருக்கும் தவிர்ப்பு, தணிப்பு, ஆயத்தம், மீட்பு, நிவாரணம், சீரமைப்பு, மறுவாழ்வு, சிறப்பான மறுக்கட்டமைப்பு, திறன் மேம்பாடு தொடர்பான வழிகாட்டுதல்கள் உள்ளன. மேலும், வெப்ப அலை மற்றும் இடி, மின்னலுக்கான செயல்திட்டங்கள் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.45 அறிவுத்திறன் பகிர்வு

### 2.45.1 மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் மண்டல அளவிலான முதல் மாநாடு

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் ஒருங்கிணைந்து 08.03.2022 மற்றும் 09.03.2022 ஆகிய நாட்களில் சென்னையில் 11 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களான; தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா, ஒடிசா, மேற்கு வங்காளம், கோவா, அந்தமான் & நிக்கோபார் தீவு, தாத்ரா மற்றும் நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ, லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் முதல் மண்டல மாநாடு சென்னையில் நடைபெற்றது. பேரிடர் மேலாண்மையில் பல்வேறு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் எதிர்கொண்ட அனுபவம் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு இந்த மாநாடு வழி வகுத்தது.

**2.45.2 யுனிசெப் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து பேரிடர் அபாயத்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான மதிப்பீடு குறித்த பயிலரங்கம்**

தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமும், யுனிசெப் நிறுவனமும், தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமையும் ஒருங்கிணைந்து பேரிடர் அபாயத்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான பயிலரங்கத்தை 20.12.2021 மற்றும் 21.12.2021 அன்று நடத்தியது. பேரிடர்களின் போது குழந்தைகளுக்கு ஏற்படும் அபாயத்தை குறைப்பதே இப்பயிலரங்கத்தின் முக்கிய நோக்கமாகும். ஆபத்து தகவல் நிரலாக்க அணுகுமுறையின் முக்கியத்துவத்தை உருவாக்குவதோடு, குழந்தைகளின் பேரிடர் அபாயத்தை தடுப்பதற்கான இலக்கை அடைய இந்த பயிலரங்கம் உதவி புரிந்தது. முக்கிய இடர் தகவல் நிரலாக்கத்திற்கான ஐந்து முன்னுரிமைகளில் ஒவ்வொன்றிற்கும் சாத்தியமான செயல்களை அடையாளம் காண இப்பயிலரங்த்தின் பங்கேற்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். ஒட்டு மொத்தமாக மாநில அரசு தற்போது செயல்படுத்தி

வரும் வளர்ச்சி திட்டங்களுக்கு இந்த பயிலரங்கம் பெரும் பங்களிப்பை அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக ஆபத்து தகவல் நிரலாக்கம் முக்கிய துறைகளின் பேரிடர் மேலாண்மை திட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட உள்ளது.

**2.45.3 பேரிடர் மேலாண்மையில் உளவியல் மற்றும் சமூக ரீதியான ஆதரவு அளித்தல் (TNSDMA – UNICEF மற்றும் NIMHANS ஆகியவற்றின் கூட்டு முயற்சி)**

பேரிடர்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உளவியல் சார்ந்த சேவைகளை மேற்கொள்வது முக்கியமான ஒன்றாகும். பேரிடர் மீட்பு பணியில் ஈடுபடுபவர்களுக்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவியல் ரீதியான ஆதரவு அளிக்கும் திறன் முக்கிய சவாலாக உள்ளது. இந்த இடைவெளியை நிரப்புவதற்காக தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை உளவியல் ரீதியிலான முதலுதவி மற்றும் பேரிடரை எதிர்கொள்ளும் மனவளம் பெறுதல் குறித்த பயிற்சியினை 100 முதல் 120 முதன்மை பயிற்சியாளர்களுக்கு வழங்க உள்ளது. பயிற்சியளிக்கப்பட்ட முதன்மை பயிற்சியாளர்கள், பேரிடர் களத்தில் உள்ள தன்னார்வலர்கள் மற்றும் முதல் நிலை மீட்பாளர்களுக்கு சமூக உளவியல்

ஆதரவு வழங்கக்கூடிய ஆலோசகர்களுக்கான பயிற்சியினை அளிப்பார்கள். தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம் உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட கடைகோடி மனிதனுக்கு கிடைக்க வேண்டிய சமூக உளவியல் உதவி மற்றும் தயார் நிலை இடைவெளி குறைக்கப்படும்.

### 2.45.4 பேரிடரை எதிர்கொள்ளும் உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பு

பேரிடரை எதிர்கொள்ளும் உள் கட்டமைப்புக்கான கூட்டமைப்பு (CDRI) என்பது 43 நாடுகளின் அரசாங்கங்கள், UN முகவர்கள், பலதரப்பு வங்கிகள், தனியார் துறை மற்றும் அறிவுசார் நிறுவனங்களின் பங்களிப்புடைய உலகளாவிய கூட்டாண்மை ஆகும். இது இந்திய அரசின் முன்முயற்சியால் உருவாக்கப்பட்டது. உறுப்பு நாடுகளில் பேரிடரினை எதிர்கொள்ளும் உட்கட்டமைப்பினை உருவாக்குவதன் மூலம் நிலையான நீடித்த வளர்ச்சியினை பெறுவதே இதன் நோக்கமாகும். இக்கூட்டமைப்பு உறுப்பு நாடுகளுக்கு தொழில்நுட்ப ஆதரவு, திறன் மேம்பாடு, ஆராய்ச்சி,

அறிவு மேலாண்மை, ஆலோசனை, கூட்டாண்மை மூலம் பேரிடரை எதிர் கொள்ளும் உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும் செய்கிறது.

### 2.45.5 – 2023–24–க்கான கூட்டு முயற்சிகள்

தமிழ்நாடு பேரிடர் அபாய குறைப்பு முகமை யுனியசெப் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் பேரிடர் அபாய குறைப்பை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளில் யுனிசெப் நிறுவனம், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு, மாநில பேரிடர் அபாய குறைப்பு நோக்கங்களை அடைய உதவி செய்யும். இம்முயற்சியில்

i. 15–ஆவது நிதி குழுவின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் மாநிலத்தில் பேரிடர் அபாயக் குறைப்பு செய்தல்.

ii. பல்நோக்கு பாதுகாப்பு மையங்களின் மேலாண்மை குழுக்களின் திறன்களை மேம்படுத்துதல்.

iii. அறிவுத்திறனை மேம்படுத்துதல்.

iv. மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டங்கள், துறைவாரியான பேரிடர் மேலாண்மை திட்டங்கள் ஆகியவற்றை தயாரிக்க உதவி புரிவது மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்களுக்கு தொழில்நுட்ப உதவி புரிதல். மேலும், தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமைக்கு, குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு திட்டத்தில் தொழில்நுட்ப உதவி மற்றும் தமிழ்நாட்டில் முக்கியமான பேரிடர்களின் அபாய குறைப்புக்கான முன்னெடுப்புகளை செயல்படுத்தவும் யுனிசெப் உதவி புரியும்.

### 2.45.6 பிற மாநில பேரிடர் ஆணையங்களுக்கு அறிவுசார் பயணம்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் தலைமையில் வருவாய் நிருவாக ஆணையர், பேரிடர் மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்கள், வல்லுநர்கள் கொண்ட குழு கடந்த 12.05.2022 முதல் 14.05.2022 வரை கர்நாடக மாநில இயற்கை பேரிடர் கண்காணிப்பு மையத்திற்கு வானிலை, மழை, இடி, மின்னல், நிலநடுக்கம் ஆகியவற்றை கண்காணிப்பது தொடர்பாகவும் மற்றும்

நடுத்தர வானிலை முன்னறிவிப்பு மற்றும் பரவலுக்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்ளகட்டமைப்புகளை அறிந்து கொள்ள சென்றது.

பேரிடர் மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்கள், வல்லுநர்கள் கொண்ட குழு கடந்த 17.02.2023 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கடல் அரிப்பு, நதிஅரிப்பு மற்றும் மறுவாழ்வுக்கான தேசிய கொள்கையின் வரைவை இறுதி செய்வதற்கான பயிலரங்கத்தில் கலந்து கொண்டது. 18.02.2023 அன்று திருவனந்தபுரத்தில் உள்ள கேரள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தின் உட்கட்மைப்புகளையும், செயல்பாடுகளையும் குழு அறிந்து கொண்டது.

வருவாய் நிருவாக ஆணையர், பேரிடர் மேலாண்மை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்கள், வல்லுநர்கள் கொண்ட குழு கடந்த 26.02.2023 முதல் 28.02.2023 வரை இந்திய தேசிய கடல்சார் நிறுவனத்திற்கு சென்று சுனாமி கண்காணிப்பு அமைப்பு பற்றியும், நிலையான வழிகாட்டு நடைமுறைப் பற்றியும் இந்திய கடல்சார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு ஆய்வுகளையும் அறிந்து கொண்டது. தமிழ்நாட்டில்

கிராம அளவில் புயல், சுனாமி பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன்களை மேம்படுத்த தேசிய கடல்சார் ஆய்வு நிறுவனம் உதவி புரிவதாக தெரிவித்தது. தெலுங்கான மாநில வளர்ச்சி மற்றும் திட்டமிடல் சங்கத்திற்கு சென்ற இக்குழு மழைப்பொழிவு, வானிலையை மற்றும் வறட்சி கண்காணிப்பது மற்றும் தரவுகளை ஆவணப்படுத்துவது குறித்து அறிந்து கொண்டது. மேலும், ஹைதராபாத்தில் உள்ள தேசிய தொலையுணர்வு மையத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான பேரிடர் மேலாண்மையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் குறித்தான கருத்தரங்கில் கலந்து கொண்டது.

## 2.46 பேரிடர் அபாயக் குறைப்புக்கான மூன்றாவது தேசிய மாநாடு

பேரிடர் அபாயக் குறைப்புக்கான மூன்றாவது தேசிய மாநாடு "மாறி வரும் பருவகால சூழலில் பேரிடரை எதிர்கொள்ளும் உள்ளூர் மக்களின் திறனை கட்டமைத்தல்" என்ற கருத்தோடு 10.03.2023 முதல் 11.03.2023 வரை புதுடெல்லியில் நடத்தப்பட்டது. இத்தேசிய மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்

துறை கலந்து கொண்டார். இம்மாநாட்டில் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் சார்பாக தமிழ்நாட்டில் பேரிடரை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் முன்னோடியான மற்றும் முத்தாய்ப்பான திட்டங்கள் குறித்து கண்காட்சி நடத்தப்பட்டது.

## 2.47 குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த பயிலரங்கம்

தேசிய பேரிடர் மேலாண்மை பயிற்சி நிறுவனமும், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையமும் இணைந்து சென்னையில் 27.03.2023 முதல் 31.03.2023 வரை குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த பயிலரங்கம் நடத்தியது. இப்பயிலரங்கத்தில் பல்வேறு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை பயிற்சியாளருக்கு குழந்தைகளுக்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக முதன்மை பயிற்சியாளகள் மூலம் மாவட்டந்தோரும் அரசு அலுவலர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் இப்பயிற்சி வழங்கப்படும்.

## முன்னோக்கிய பாதை

சமீப காலமாக இயற்கை இடர்பாடுகளின் போக்கில் பெரும் மாற்றம் உள்ளது. பருவகால மாற்றம் பேரிடர்களின், குறிப்பாக கனமழை, மேக வெடிப்பு, இடி, மின்னல் போன்றவற்றின் தீவிரம் மற்றும் அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வறட்சி, வெப்ப அலை போன்ற தீவிர பேரிடர்களின் நிகழ்வு அதிகரித்து வருகிறது. பேரிடரை எதிர்கொள்ளும் மாநிலத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் தமிழ்நாடு அரசு, ஆயத்தம், திறன் மேம்பாடு, பேரிடர் தணிப்பு முதலீடு, தட்பவெப்ப நிலையை தாங்க கூடிய உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் போன்ற செயல்பாடுகளில் உறுதியுடன் உள்ளது. பல்துறை கூட்டாண்மை மூலம் பேரிடர் பாதிப்புகளை எதிர்கொள்ளுவதற்கான திறன் மேம்படுத்தப்படும்.

## 2.48 நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கத்தை எதிர்கொள்வதற்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொள்வதே நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு எண் 13 ஆகும். தமிழ்நாடு அரசு மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை 2023 மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் 2023 ஆகியவற்றை வெளியிட்டுள்ளது.

இந்த இரண்டு ஆவணங்களும் மாநிலத்தில் காலநிலை தொடர்பான ஆபத்துகள் மற்றும் இயற்கை பேரிடர்களின் தாக்கத்தினை எதிர்கொள்ளும் திறனை வலுப்படுத்த வலியுறுத்துகின்றன. பேரிடர் மேலாண்மைத் துறையின் செயல்திறன் மூன்று குறியீடுகள் மூலம் அளவிடப்படுகிறது.

**இலக்கு எண். 13.1.2. தீவிர காலநிலை காரணமாக ஒரு இலட்சம் மக்கள் தொகையில் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையை குறைப்பது**

பேரிடர்களை திறம்பட எதிர்கொள்ள, கடைக்கோடி மக்களை சென்றடையும் வகையில் முன்னெச்சரிக்கை அமைப்பு, மீட்புப் படைகளை வலுப்படுத்துதல் மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளிலிருந்து பொதுமக்களை முன்கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பது உள்ளிட்ட ஆயத்த நடவடிக்கைகளை அரசு வலுப்படுத்தி வருகிறது. மேம்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை அமைப்புகளான TN–SMART, பொதுவான எச்சரிக்கை நெறிமுறை மற்றும் கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள 424 பேரிடர் எச்சரிக்கை அறிவிப்பு அமைப்புகளின் காரணமாக கடந்த ஆண்டுகளில் தீவிர காலநிலையால், ஒரு இலட்சம் மக்கள் தொகையில்

ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை கணிசமாக குறைக்கப்பட்டது.

**இலக்கு 13.3 காலநிலை மாற்றத்தைத் தணித்தல், தாக்கத்தைக் குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்பு ஆகியவை தொடர்பான கல்வி, விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள், பேரிடர்களின் முக்கிய பங்குதாரர்களின் திறனை மேம்படுத்துதல்**

**13.3.1a – பேரிடர் தணிப்பு, தாக்கத்தை குறைத்தல், முன்னெச்சரிக்கை அமைப்பு ஆகியவற்றில் மாநிலத்தின் ஒருங்கிணைப்பு குறித்து தொடக்கப்பள்ளி முதலான பாடத்திட்டங்களில் அறிமுகப்படுத்துவது.**

பேரிடர் மேலாண்மைக் குறித்த விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடையே உருவாக்குவதற்காக 7 முதல் 12 ஆம் வகுப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சி வகுப்பு பாடத்திட்டங்களில் பேரிடர் மேலாண்மை குறித்து பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**13.3.2. திறன்மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

பேரிடர்களின் போது சமூகப் பங்களிப்பு மற்றும் எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தும் வகையில்,

5,500 ஆப்த மித்ரா தன்னார்வலர்களுக்கும், 65,000 முதல் நிலை மீட்பாளர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளில் தொடர்ந்து மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஒத்திகைப் பயிற்சிகள் நடத்தப்படுவதோடு, பொதுமக்களுக்கு பேரிடர் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

### 3. நில நிருவாகம்

நிலம் தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த 1980–ஆம் ஆண்டு முன்னாள் வருவாய் வாரியத்திலிருந்து நில நிருவாக ஆணையரகம் உருவாக்கப்பட்டது.

இவ்வாணையரகத்தால் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு:–

- நிலவுடைமை ஆவணங்கள் பராமரித்தலைக் கண்காணித்தல் (தனியார் நிலங்களின் பட்டா மாற்றம் / அவற்றின் மீதான மேல்முறையீடு மற்றும் சீராய்வு முறையீடு)
- இரயத்துவாரி நிலவரிச் சட்டங்கள், நத்தம் நிலவரித் திட்டம், நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழான சட்டபூர்வ மற்றும் மேல் முறையீட்டு அதிகாரங்கள்

**அரசு நிலங்கள் தொடர்பானவை**

- அரசு நிலங்களை மாநில அரசின் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறையின் பயன்பாட்டிற்கும் ஒன்றிய அரசின் துறைகளின் பயன்பாட்டிற்கும் நிலமாற்றம் செய்து வழங்குதல்

- ஒன்றிய/ மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்கள்/ வாரியங்களுக்கு நில உரிமை மாற்றம் செய்தல்,
- ஆட்சேபணையுள்ள மற்றும் ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுதல்.
- அரசு நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்,
- விவசாய நில ஒப்படை/ வீட்டுமனை ஒப்படை ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளில் உள்ள குடியிருப்பு ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துதல்
- பொது நோக்கங்களுக்காக தனியார் நிலங்களை கையகப்படுத்தல்
- அரசின் நீர் ஆதாரங்களிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுப்பதை முறைப்படுத்துதல்.

### 3.1 வீட்டுமனை ஒப்படை

வீடற்ற ஏழைகள் அனைவருக்கும் ஏற்புடைய வாழ்விடம் அமைத்து தரும் பொருட்டு இலவச வீட்டுமனைகள் வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்குவதே அரசின் கொள்கையாகும். அதன்படி, வருவாய் நிலை ஆணை எண்.21 இன் விதிகளின்

கீழ், "காலிநத்தம்" என வகைப்படுத்தப்பட்டு, கிடைக்கக் கூடிய அரசு நிலங்களை ஒதுக்கீடு செய்து வீடு இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்படுகிறது. நத்தம் என வகைப்படுத்தப்பட்ட போதிய நிலங்கள் இல்லாத சூழ்நிலையில் வருவாய் கோட்டாட்சியர்கள்/ மாவட்ட ஆட்சியாளர்கள் வருவாய் நிலை ஆணை 21(6)–இன்கீழ் பல்வேறு வகையான ஆட்சேபனையற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களை வகைப்பாடுமாற்றம்செய்து, வீடற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க அதிகாரமளிக்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பிற்படுத்துப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையால் ஒதுக்கப்பட்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு இ–பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. பெண்களின் நலனை உறுதி செய்வதற்காக, குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர்கள் பெயரில் மட்டுமே இலவச வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன.

07.05.2021 முதல் 31.03.2023 வரை, முறையான வீட்டுமனைப் பட்டா வழங்குதல் திட்டம், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலத்திட்டத்தின்

கீழ் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குதல், சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்கில் குடியிருந்து வரும் தகுதியுள்ள நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் மற்றும் நகரளவை திட்டத்தின் கீழ் வீட்டுமனை பட்டா வழங்குதல் என மொத்தம் 4,37,900 பட்டாக்கள்/ இ–பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக இருளர் மற்றும் நரிக்குறவர் போன்ற விளிம்பு நிலை சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குவதில் தனி கவனம் செலுத்தப்படுகிறது.

### 3.2 பட்டா மாறுதல்

பட்டா மாறுதல் சேவையானது, பொது மக்களைச் சென்றடைவதை இந்த ஆணையரகம் கண்காணித்து வருகிறது. மேலும். நிலநிருவாக ஆணையரால் இணையதள வழியிலான பட்டா மாறுதல் பணி குறித்த காலமுறை சீராய்வு கூட்டங்கள் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர்/ மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்டு வருகிறது.

**இணையதள வழியிலான பட்டா மாறுதல்**

பட்டா மாறுதல் தொடர்பான இணையதள சேவைகள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களுக்கு அருகிலுள்ள பொது சேவை மையத்தில் இணையதளத்தில், பட்டா மாறுதல் சேவைக்காக விண்ணப்பிக்கும் போது அவர்களுக்கு உடனடியாக ஒப்புகைச் சீட்டு வழங்கப்படுகிறது இதன் தொடர்ச்சியாக, இந்தப் பட்டா மாறுதல் கோரும் மனு மீது வட்ட அளவிலான அலுவலர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. பட்டா மாறுதல் கோரும் மனுவின் மீதான நடவடிக்கையானது, குறுஞ்செய்தி (SMS) மூலமாக மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. இந்த வசதியினை பயன்படுத்தி மனுதாரர் சிட்டா நகலையும், "அ" பதிவேடு நகலையும் இணைய வழியில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறு எடுக்கப்படும் நகல்களில், இணையவழி கையொப்பம் மற்றும் சிறப்புக் குறியீடு மூலம் (Quick Response – QR) இணைக்கப்பட்டு இந்த ஆவணங்கள் சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது மாநிலத்தின் அனைத்து வட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இணைய வழி பட்டா

மாறுதல் திட்டத்தின் வழியாக பெறப்படும் விண்ணப்பங்களில் உள்ள நிலுவை இனங்கள் நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகம் மற்றும் நில நிருவாக ஆணையரகம் மூலமாக உரிய காலங்களில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், இணையவழி பட்டா மாறுதல்களை மாவட்ட அளவில் துரிதப்படுத்த உரிய அறிவுரைகளை அரசு அவ்வப்போது வழங்கி வருகிறது. பொது சேவை மையங்கள் மட்டும் அல்லாமல், விண்ணப்பதாரர்கள் நேரடியாக இணைய வழியாக குடிமக்கள் போர்ட்டலில் (Portal) விண்ணப்பம் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நிலம் தொடர்பாக பதிவுத்துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பதிவுகளும், வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்பட்டு, இணையதளம் வழியாக வருவாய்ப் பதிவேட்டில் (Tamilnilam land records database) மாறுதல் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம், நில உரிமையாளர்கள் பட்டா மாறுதல் கோரி தனியாக மனு செய்வது தவிர்க்கப்படுகிறது.

### 3.3 நிலக் குத்தகை

வருவாய் நிலை ஆணை எண்.24A–இன்கீழ், அரசின் புறம்போக்கு நிலங்கள்/ கட்டடங்கள்/ நிலத்துடன் கூடிய கட்டடங்கள் போன்றவற்றை, வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்காக நிறுவனங்கள், தனிநபர்கள், தனியார் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், பிற சங்கங்கள், ஆகியவற்றிற்கு தற்காலிகமாக குத்தகை அடிப்படையில் பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. குத்தகைக்கு வழங்கப்படும் அரசு புறம்போக்கு நிலங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் கீழ்க்கண்ட முக்கியமான நிபந்தனைகள் விதிக்கப்படுள்ளன.

i. குத்தகை நிலம் எந்த நோக்கத்திற்காக குத்தகைக்கு வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ii. குத்தகைக்கு வழங்கப்பட்ட அரசு நிலத்தை வேறு நபருக்கு உள்குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவதோ அல்லது குத்தகை உரிமையை மாற்றம் செய்யவோ கூடாது.

iii. குத்தகை நிபந்தனை மீறப்படின், எவ்வித இழப்பீடுமின்றி உரிய வழிமுறைகளின்படி குத்தகை நிலம் அரசு வசம் மீள எடுத்துக் கொள்ளப்படும்.

பொதுவாக குத்தகை இனங்கள் குறைந்த பட்சம் 3 ஆண்டுகளுக்கும் அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் வழங்கப்படுகின்றன. சில சிறப்பு நேர்வுகளில், அத்தியாவசியம், சமூகசேவை மற்றும் பொது நல நோக்கங்களின் அடிப்படையில் செயல்படும் அமைப்புகளுக்கு தேவை எனக் கருதும் பட்சத்தில், அதிகபட்சமாக 99 வருடங்களுக்கு அரசளவில் குத்தகை உரிமை வழங்கப்படுகிறது.

தற்போது உள்ள விதிமுறைகளின்படி வணிகமற்ற நோக்கத்தில் செயல்படும் குத்தகை இனங்களில் ஆண்டு குத்தகை கட்டணம் நிலத்தின் சந்தை மதிப்பில் 7 விழுக்காடும், வணிக நோக்கத்தில் செய்யப்படும் இனங்களில் 14 விழுக்காடும் நிர்ணயம் செய்யப்படுகிறது. நிலத்தின் சந்தை விற்பனை மதிப்பு அல்லது வழிகாட்டி பதிவேட்டின் மதிப்பு ஆகியவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் அரசு நிலத்தின் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் பேரில் நிலக் குத்தகைக் கட்டணம்

கணக்கிடப்படுகிறது. சிறப்பு நேர்வுகளில் சமூக சேவை மற்றும் பொதுநல நோக்கில் செயல்படும் அமைப்புகளுக்கு சலுகை அடிப்படையில் பெயரளவு குத்தகை தொகை அரசால் நிர்ணயம் செய்யப்படுகிறது.

நீண்ட காலக் குத்தகை இனங்களில், நில மதிப்பினை கணக்கில் கொள்ளாமல், அப்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் ஆண்டு குத்தகைத் தொகையானது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியரால் மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

குத்தகைக்கு உட்படும் அரசு நிலங்களின் உத்தேச நில மதிப்பின் அடிப்படையில், புதிய குத்தகை இனங்கள் மற்றும் குத்தகை புதுப்பிப்பு இனங்கள் ஆகியவற்றிற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பல்வேறு அலுவலர்களுக்கான நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:–

## அட்டவணை 3.1

| அலுவலர்கள் | நிதி அதிகார வரம்பு (நில மதிப்பில்) | |
|---|---|---|
| | நில குத்தகை (புதிய இனங்களுக்கு) (ரூபாய்) | குத்தகை புதுப்பித்தல் (ரூபாய்) |
| வட்டாட்சியர் | இல்லை | இல்லை |
| வருவாய் கோட்டாட்சியர் | ரூ.50,000/- வரை | இல்லை |
| மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.1,00,000/- வரை | இல்லை |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.4,00,000/- வரை | ரூ.10,00,000/-வரை |
| நில நிருவாக ஆணையர் | ரூ.5,00,000/- வரை | ரூ.25,00,000/-வரை |
| அரசு | ரூ.5,00,000/- க்கு மேல் | ரூ.25,00,000/-க்கு மேல் |

குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட அரசு நிலங்கள் தொடர்பான விவரங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த குத்தகை பதிவேட்டில் (Master Lease Register) பதிவு செய்யப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பராமரிக்கப்படுகிறது. ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும், வருவாய்த் தீர்வாயம் (Jamabandhi) நடைபெறும் போது இப்பதிவேட்டில் உள்ள பதிவுகள் புதுப்பிக்கப்படுகின்றன (Updated).

குத்தகைக்கு வழங்கப்பட்ட புலங்களில், குத்தகை நிபந்தனைகள் சரிவர கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை வட்டாட்சியர் / வருவாய்க் கோட்டாட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் அவ்வப்போது புலத் தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண்.803, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 29.12.2000– இன்படி, குத்தகை இனங்களுக்கு அரசு கூடுதல் தலைமை செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, அரசு கூடுதல் தலைமை செயலாளர், நிதித்துறை மற்றும் நில நிருவாக ஆணையர் உறுப்பினர் / ஒருங்கிணைப்பாளர் ஆகிய மூன்று நபர் குழு அரசால் அமைக்கப்பட்டது.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களால் 18.3.2022 அன்று சட்டப்பேரவையில் புதிய நிலக்குத்தகை கொள்கை உருவாக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து, நில குத்தகை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப புதிய வரைவு நில குத்தகை கொள்கை தயார் செய்யப்பட்டு, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

### 3.3.1. உப்பள நிலங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

அதே போன்று வருவாய் நிலை ஆணை எண். 24A–இன்படி, கடலோர மாவட்டங்களில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் (Salt Pan) உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்தி செய்வதற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்திக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் அரசு நிலங்களுக்கான குத்தகை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 3.2**

| | | |
|---|---|---|
| 1. | குத்தகைத் தொகை | ரூ.5/–வீதம் ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| 2. | உரிமத் தொகை | உற்பத்தி செய்யப்பட்ட உப்பு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.2/– வீதம் குறைந்த பட்சமாக ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு ரூ.100/– |
| 3. | தலவரி 100% | ரூ.5/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| 4. | தலமேல்வரி 500% | ரூ.25/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |
| | மொத்தம் | ரூ.135/– ஒரு ஏக்கருக்கு / ஒரு வருடத்திற்கு |

தமிழக கடலோரப் பகுதிகளில் சுமார் 27,777 ஏக்கர் அரசு உப்பள நிலங்கள், குத்தகை அடிப்படையில் தனிநபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு, உப்பு மற்றும் அதன் சார்பு பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. கட்டண விகிதத்தில் திருத்தம் மேற்கொள்ள அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

### 3.4 ஆக்கிரமணங்களை அகற்றுதல்

அரசு நிலங்களைக் காப்பது, பராமரிப்பது மற்றும் அரசின் பல்வேறு துறைகள் மற்றும் பணி திட்டங்களுக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்வது மற்றும் ஆக்கிரமிப்பின்றி நிலங்களைப் பாதுகாப்பது வருவாய் துறையின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். அரசு நிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனுமதியற்ற கைப்பற்றுதல்கள் ஆக்கிரமணங்கள் என கருதப்படும். அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அளப்பதும் மற்றும் ஆக்கிரமணத்தின் தன்மை மற்றும் வசிப்போர் விபரம் போன்றவற்றை மதிப்பீடு செய்வது வருவாய்த் துறையின் பணிகளாகும். வருவாய் துறையின் கைப்பற்றிலுள்ள நிலங்களுக்கு தமிழ்நாடு ஆக்கிரமண சட்டம் 1905 / பிரிவுகளின் படியும், இதர துறைகளாகிய நீர்வள ஆதாரத்துறை, உள்ளாட்சித்துறை போன்றவைகளுக்கு தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்ரமணங்கள் அகற்றுதல் சட்டம், நெடுஞ்சாலைத் துறை சட்டம், வக்ஃபு சட்டம், இந்து சமய அறநிலையத்துறை சட்டம், மற்றும் ஊரக /

நகராட்சி / மாநகராட்சி சட்டம் என அந்தந்த துறைகளின் சட்டப்பிரிவுகளின் கீழ் ஆக்ரமணங்கள் அகற்றப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [நி.மு 6(2)] துறை, நாள் 8.2.2022–இல் கோட்ட கண்காணிப்பு குழு (வருவாய் கோட்டாட்சியர் தலைமையிலும்), மாவட்ட கண்காணிப்பு குழு (மாவட்ட ஆட்சியர் தலைமையிலும்) மாநில வழிகாட்டும் குழு (அரசின் தலைமைச் செயலர் தலைமையிலும்), அமைத்து ஒரு முனை திட்டத்தின் அடிப்படையில், அரசின் நீர்நிலை மற்றும் இதர புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமணங்களை கண்டறிந்து, நடவடிக்கை எடுத்து, ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிவகை செய்யப்பட்டது. இதுவரை, நீர்நிலைகள் மற்றும் இதர அரசு புறம்போக்குகளில் இருந்த 13044.85.43 ஹெக்டர் ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டுள்ளன.

### 3.4.1 அரசு நிலங்கள் மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல் நிதி

அரசு கடிதம் (நிலை) எண்.277, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நிமு6(2)] துறை, நாள் 21.6.2022–இன்படி அரசு நிலங்கள் மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாப்பு நிதியாக, ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான வழிகாட்டி நெறிமுறைகளுடன் வழங்கப்பட்டது. அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.50 கோடி, அனைத்து

மாவட்டங்களுக்கும், (மாநகராட்சிகள் உட்பட), அரசு நிலங்களில் உள்ள ஆக்ரமணங்களை அகற்றவும், வேலியிட்டு, அவைகளை பாதுகாக்கவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ரூ.1318,92,81,667/- மதிப்பு கொண்ட 388.1021 ஹெக்டர் பரப்பளவிலான அரசு நிலங்களுக்கு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

### 3.5 நில மாற்றம்

அரசு நிலங்கள் வருவாய் நிலை ஆணை எண். 23 மற்றும் 23A-இன்கீழ், நிலமாற்றம் செய்யப்படுகின்றன. வருவாய் நிலை ஆணை எண். 23-இன் கீழ் ஒன்றிய அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையத்தை வசூலித்துக் கொண்டும், வருவாய் நிலை ஆணை எண். 23A -இன் கீழ் மாநில அரசுத் துறைகளுக்கு நிலக்கிரையமின்றியும் அரசு நிலங்கள் நிலமாற்றம் செய்யப்படுகின்றன.

அரசுத் துறைகளுக்கு ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களை நில மாற்றம் செய்யும் நேர்வுகளில் நில மதிப்பு வரம்பின்றி முன் நுழைவு அனுமதி வழங்கவும், ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களுக்கு சம்பந்தப்பட்ட துறையின் தடையின்மைச் சான்று பெற்று முன் நுழைவு அனுமதி வழங்கவும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.6 நில உரிமை மாற்றம்

அரசு நிலங்களை வருவாய் நிலை ஆணை எண்.24–இன்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் / கழகங்கள் / வாரியங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றிற்கு பொதுப் பயன்பாட்டிற்காகவும், அவற்றின் திட்டங்களுக்காகவும் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. சில நேர்வுகளில் தனியார் நிறுவனங்களுக்கும் அவற்றின் தேவை, அவசியம் போன்றவற்றினை ஆய்வு செய்து, அரசின் வசம் போதுமான நிலம் இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. நில உரிமை மாற்றத்தின்போது வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஒரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும், வணிக நோக்கத்திற்காக நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு சந்தை நில மதிப்பு வசூல் செய்தும், வருவாய் நிலை ஆணை எண் 24(6)–இன் படி உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

பொது நலன் கருதி, குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்களுக்காக அரசு நிலங்கள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மற்றும் இதர உள்ளாட்சி

அமைப்புகளுக்கு நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. அவ்வாறே, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தும் திட்டத்திற்காக அரசு நிலங்கள் நிலக் கிரயமின்றி நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது.

அரசு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஏதேனும் நிபந்தனை மீறல் கண்டறியப்படும் எனில் அரசு நிலங்களை மீளப்பெற அரசுக்கு அதிகாரம் உண்டு.

ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரை, நில உரிமை மாற்ற ஆணையினை நிலுவையில் வைத்து, நிலமதிப்பு உச்சவரம்பின்றி முன் அனுமதி வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் தற்போதைய நிதி அதிகார வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 3.3**

| வ. ண் | பதவி | அதிகார வரம்பு(ரூ.) |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | 50,000/- |
| 2 | வருவாய் கோட்ட அலுவலர் | 1,00,000/- |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | 2,50,000/- |
| 4 | மாவட்ட ஆட்சியர் | 10,00,000/- |
| 5 | நில நிர்வாக ஆணையர் | 15,00,000/- |
| 6 | அரசு | 15,00,000/- க்கு மேல் |

### 3.6.1 தலைமைச் செயலக அளவிலான குழு

நிலமாற்றம், நில உரிமை மாற்றம் தொடர்பான முன்மொழிவுகளின் மீது விரைந்து முடிவெடுப்பதற்கு ஏதுவாக தலைமைச் செயலக அளவிலான குழு அமைக்கப்பட்டது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை செயலாளரை தலைவராகவும், நில நிர்வாக ஆணையரை ஒருங்கிணைப்பாளர் / உறுப்பினர் செயலாளராகவும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி, இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறைகளின் இசைவு / தடையின்மை கோரப்படும் நேர்வுகளில் தொடர்புடைய முன்மொழிவு இக்குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு துறைத் தலைவர்களின் கருத்திசைவு அல்லது ஆட்சேபணை பெறப்படுகிறது.

2021–ஆம் ஆண்டு முதல் 2023–ஆம் ஆண்டு வரையில் 1129.34 ஏக்கர் அரசு நிலங்கள், பள்ளிக் கல்வி, உயர் கல்வி, சட்டம் நீதி, காவல், சுகாதாரம், நெடுஞ்சாலை, பொதுப்பணி, போக்குவரத்து, வருமான வரி, வணிக வரி, தொழில் மற்றும் வணிகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வருவாய், சமூக நலம், மீன் வளம், பாதுகாப்பு போன்ற பல்வேறு அரசுத்

துறைகளுக்கு 87 இனங்களில் நில மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

01.04.2021 முதல் 31.03.2023 வரையில் 2300 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலங்கள், 208 இனங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் / வாரியங்கள் முதலியன பொது நோக்கங்களுக்காக, நில உரிமை மாற்றம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண்.621, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 01.10.2021– இன்படி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள அரசு நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்கனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை ரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்து பட்டா வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.72, குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, நாள். 30.11.2021–இன்படி அரசு மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன (TANSIDCO) தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களுக்கு உரிய நில உரிமை மாற்ற அரசாணை பெற்றிடவும், இரயத்துவாரி மனை என வகைபாடு மாற்றம் செய்யவும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) தொடர்பான நிலப்பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காகவும், தொழில் முனைவோருக்கு பட்டா வழங்கிட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் தக்க உத்தரவுகளை பெற்றுத் தரவும், அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில், அதிகாரம் பெற்றக் குழுவினை அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 3.7 சட்டத் தனிப்பிரிவு

அரசாணை (நிலை) எண்.355, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்.05.08.2022–இன்படி நில நிர்வாக

ஆணையரகத்தில் சட்டத் தனிப்பிரிவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நில நிர்வாக துறையின் சட்டத் தனிப்பிரிவானது நீதிமன்ற வழக்குகளை (CCMS), மாண்புமிகு உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பெருமளவிலான வழக்குகளைக் கண்காணிக்கவும், தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள நிலம் தொடர்பான நிலுவை வழக்குகள் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான நீதிமன்ற வழக்குகளையும் ஒருங்கிணைத்து விரைந்து தீர்வு காணும் நோக்கத்தில் அரசு வழக்கறிஞர்களுக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கும் இடையில் பாலமாக செயல்பட்டு வழக்குகளில் பதிலுரை தாக்கல் செய்யவும், சட்டம் தொடர்பான சிக்கல்களுக்கு சட்டக்கருத்துரை பெற்றும் அளிக்கின்றது. இதனால், நில நிர்வாகத்துறை பல்வேறு சட்ட சிக்கல்களை எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.

## 3.8 நில எடுப்பு

2013-ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும்

மறுகுடியமர்வு உரிமைச்சட்டம் (ஒன்றிய சட்டம் 30/2013) ஒன்றிய அரசால் 01.01.2014 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் முந்தைய 1894ஆம் ஆண்டின் பழைய நிலஎடுப்புச் சட்டம் நீக்கரவு செய்யப்பட்டது.

**மேற்கண்ட புதிய நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம்,** 2013, நிலஎடுப்புச் சட்டத்தின் பிரிவு 105A–இன் கீழ் ஐந்தாவது அட்டவணையில் பின்வரும் மூன்று நிலஎடுப்புச் சட்டங்கள் சேர்க்கப்பட்டன:–

i. தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1978 (தமிழ்நாடு சட்டம் 31/1978)

ii. தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999)

iii. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002)

மேற்படி மூன்று நிலஎடுப்பு சட்டங்களின் கீழ் நிலஎடுப்புப் பணிகளை தொடர்வதற்கு ஏதுவாக

தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டம், 2019 (தமிழ்நாடு சட்டம், 38/2019) இயற்றப்பட்டு, மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன்படி மேற்குறிப்பிட்டுள்ள மூன்று தமிழ்நாடு நிலஎடுப்புச் சட்டங்களின் அனைத்து சட்டப் பிரிவுகளும் (இழப்பீடு நிர்ணயம் செய்தல் தொடர்பான சட்டப் பிரிவுகள் தவிர) 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26–ஆம் தேதியன்று மற்றும் அன்றைய தேதியிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 2013–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சரியீட்டைத் தீர்மானித்தல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வைத் தீர்மானித்தல், மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் முதலானவை மேற்படி மூன்று சட்டங்களுக்கும் பொருந்தும்.

பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துவது மிகவும்

இன்றியமையாதது. அவ்வாறு, மாநிலம் முழுவதும் ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களுக்காக சுமார் 25,000 ஹெக்டேர் பட்டா நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவற்றுள் சில முக்கியமான திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு.

**நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒன்றிய/மாநில அரசுகளின் சில முக்கிய திட்டங்கள்**

- மாநில அரசின் நீர்வளத்துறையின் கீழ் தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிநீர் இணைப்புத்திட்டம், காவேரி – வைகை – குண்டாறு நதிநீர் இணைப்புத்திட்டம், தர்மபுரி – கிருஷ்ணகிரி எண்ணேகொள் கால்வாய் திட்டம், கடலூர் அருவாள்மூக்கு கால்வாய் திட்டம், தஞ்சாவூர் – மயிலாடுதுறை – கடலூர் ஆதனூர் குமாரமங்கலம் திட்டம், சேலம் மேட்டூர் சரபங்கா திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- மாநில நெடுஞ்சாலைத்துறையின் கீழ் சென்னை சுற்றுவட்டச்சாலை, சென்னை வெளிவட்டச் சாலை, சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டச்சாலைகள்,

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – 2, பல்வேறு நகரங்களுக்கான புறவழிச்சாலைகள், சாலை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் மற்றும் பல்வேறு சாலை விரிவாக்க பணிகளுக்கான நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு மாநில தொழில் வளர்ச்சிக் கழகத்திற்காக (சிப்காட்), இராணிப்பேட்டை பனப்பாக்கம் தொழிற்பூங்கா, திருவண்ணாமலை செய்யாறு தொழிற்பூங்கா, திருவள்ளூர் மாநெல்லூர் தொழிற்பூங்கா, கிருஷ்ணகிரி ஓசூர் தொழிற்பூங்கா, திருநெல்வேலி கங்கை கொண்டான் தொழிற் பூங்கா, தூத்துக்குடி அல்லிக்குளம் தொழிற் பூங்கா உள்ளிட்ட பல்வேறு தொழிற்பேட்டைகள்/ தொழிற்பூங்காக்கள் அமைப்பதற்கான நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஒன்றிய அரசின் துறைகளான தேசிய நெடுஞ்சாலைத்துறை / தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்காக சித்தூர் – தச்சூர் இணைப்புச்சாலை, மதுரை வட்டச்சாலை,

மதுரை – ராஜபாளையம் – செங்கோட்டை – கேரள எல்லை இணைப்புச்சாலை, மாமல்லபுரம் – புதுச்சேரி தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகளுக்காகவும், இரயில்வே துறைக்காக, தூத்துக்குடி – மதுரை அகல இரயில் பாதை அமைத்தல், தூத்துக்குடி – மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல இரயில் பாதை அமைத்தல், வாஞ்சிமணியாச்சி – நாகர்கோயில் அகல இரயில் பாதை அமைத்தல், திண்டிவனம் – நகரி புதிய அகல இரயில் பாதை அமைத்தல், சின்னசேலம் – கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை அமைத்தல், கன்னியாகுமரி – திருவனந்தபுரம் அகல இரயில் பாதை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு இருப்புப்பாதை திட்டங்களுக்காகவும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்காக (இஸ்ரோ) தூத்துக்குடியில் சிறிய செயற்கைக்கோள் ஏவுதளம் அமைக்கும் திட்டத்திற்காகவும் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மேலும், ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்களான சென்னை பெட்ரோலிய

கழகத்திற்கு (சி.பி.சி.எல்) நாகப்பட்டினத்தில் பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் (என்.எல்.சி) சார்பில் கடலூர் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி சுரங்கம் அமைக்கவும் நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நில எடுப்பு தொடர்பாக நில நிர்வாகத்துறையால் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான பணிகள்**

நில நிர்வாகத் துறையானது, மூன்று நிலஎடுப்பு சட்டங்களின் கீழ் சட்டப்பூர்வ அதிகாரங்களை செயல்படுத்தும் விதமாகவும், நிலஎடுப்பு நடவடிக்கைகளில் பல்வேறு செயலாக்க பணிகளை மேற்கொள்ளும் விதமாகவும், நிலஎடுப்பு அலுவலர்களின் பணிகளை மேற்பார்வையிடும் வகையிலும் மற்றும் பல்வேறு நிலஎடுப்பு இனங்களில் அரசிற்கு உரிய ஆலோசனைகள் வழங்கும் விதமாகவும் மிக முக்கிய பணிகளை ஆற்றி வருகிறது. உதாரணமாக,

- சட்டப்பூர்வ வகையில் – மாநில நெடுஞ்சாலைகள் சட்டம், 2001 பிரிவு 15(1) மற்றும் தமிழ்நாடு

தொழிலியல் நோக்கங்களுக்கான நிலஎடுப்புச் சட்டம், 1997 பிரிவு 3(1) – ன் கீழ் இறுதி நிலஎடுப்பு அறிவிப்புகளை ஒப்பளித்து அரசிதழில் வெளியிடுதல்.

- அலுவல் ரீதியான செயலாக்க வகையில் – ரூ. 10 கோடிக்கு மேற்பட்ட வரைவு தீர்ப்பாணைகளை ஒப்பளித்தல், புதிய நிலஎடுப்பிற்கான நிர்வாக அனுமதிக்குரிய பிரேரணைகளை அரசிற்கு பரிந்துரைத்தல் மற்றும் நிலஎடுப்பிற்கான சிறப்பு அலகுகளை பணிநீட்டிப்பு செய்தலுக்கான பிரேரணைகளை அரசிற்கு பரிந்துரைத்தல்.

- மேற்பார்வை செய்யும் வகையில் – 2013–ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச்சட்டம், 1997–ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2001–ஆம் ஆண்டின் தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம் மற்றும் 1956–ஆம் ஆண்டின் தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம் ஆகியவற்றின் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள், சிறப்பு மாவட்ட

வருவாய் அலுவலர்கள் (நி.எ) ஆகியோரின் பணிகளை கண்காணித்து நிலஎடுப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல்.

- ஆலோசனை வழங்கும் வகையில் – உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை தொடர்பான வழக்குகள் மற்றும் சில குறிப்பிட்ட நிலஎடுப்பு இனங்கள்/ வழக்குகள் மீது அரசிற்கு கருத்துருக்கள் / குறிப்புகள் வழங்குதல்.

மாநிலம் முழுவதும் பல்வேறு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு தேவையான நிலங்களை நிலஎடுப்பு செய்யும் பணிக்கென 55 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் உட்பட மொத்தம் 4575 சிறப்பு நிலஎடுப்பு பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது தவிர, சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட வருவாய் அலுவலர்களும், வருவாய்த் துறையினைச் சார்ந்த பணியாளர்களும் நில எடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

01.04.2022 முதல் 28.02.2023 வரையிலான காலத்தில் மாநிலம் முழுவதும் பல்வேறு நில எடுப்புச் சட்டங்களின் கீழ் 1486 ஹெக்டேர் பரப்புள்ள

நிலங்களுக்கு நில எடுப்பிற்கான முதல் நிலை அறிவிக்கையும், 3363 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு நில எடுப்பிற்கான இறுதி அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 3866 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு இறுதித் தீர்வாணைகள் பிறப்பிக்கப்பட்டு இழப்பீட்டுத் தொகையாக நில உரிமையாளர்களுக்கு ரூ. 5,194 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**நில எடுப்பு பணிகளை விரைவுபடுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சில நடவடிக்கைகள்**

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, நிலஎடுப்பு பணிகளை எளிமைப்படுத்தி விரைவாக மேற்கொள்ளும் பொருட்டும், நில உரிமையாளர்களுக்கு உரிய காலத்திற்குள் நியாயமான இழப்பீட்டு தொகையினை வழங்கும் பொருட்டும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நில எடுப்பிற்கான நிதி ஒதுக்கீடு பெறுதல் மற்றும் சிறப்பு நிலஎடுப்பு பணியிடங்களை தோற்றுவித்தல்/ நீட்டிப்பு செய்தல் உள்ளிட்ட பணிகளை திறம்பட மேலாண்மை செய்யவும், நில எடுப்பு பணிகளை

மாநில அளவில் ஒருங்கிணைக்கவும் நிலநிர்வாக ஆணையரின்கீழ் தமிழ்நாடு நிலஎடுப்பு முகமை (LAATAN) என்ற சிறப்பு அமைப்பானது அரசாணை (நிலை)எண்.90, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 25.02.2022–ன் படி 40 பணியிடங்களை உள்ளடக்கியவாறு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான நில எடுப்பு பணிகளை கண்காணிக்கவும், விரைவுபடுத்தவும் அரசாணை (நிலை)எண்.222, நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 24.11.2022–ன்படி 23 பணியிடங்களை உள்ளடக்கிய ஒரு சிறப்பு அலகானது ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- பல்வேறு துறைகளிடமிருந்து நில எடுப்பு பணிகளுக்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையில் விரைந்து நில எடுப்பு பணிகளுக்கான நிதியினை ஒப்பளிக்கும் பொருட்டு

அரசாணை (நிலை)எண்.457, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 20.09.2022–ன்படி துறைச் செயலாளர்களை உள்ளடக்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழு அமைக்கப்பட்டு நில எடுப்பு பணிகளுக்குக்கான இழப்பீட்டுத் தொகையினை ஒப்பளிக்கும் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

- நில எடுப்பு தீர்வாணைகளை எதிர்த்து உயர் இழப்பீட்டுத்தொகை கோரி தொடரப்படும் மனுக்கள் மீது நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கேற்ப நிதி ஒதுக்கீட்டினை விரைந்து ஒப்பளிப்பு செய்யவும், சமரச தீர்ப்பாயம் (லோக் அதாலத்) மூலமாக நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிவு செய்யவும், அரசாணை (நிலை) எண்.346, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 26.07.2022–ன் படி, தலைமைச் செயலாளர் தலைமையில் பல்துறை செயலாளர்களை உள்ளடக்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

- மாநில நெடுஞ்சாலைத் துறை மூலம் மேற்கொள்ளப்படும் நில எடுப்பு பணிகளை விரைவுபடுத்தும் நோக்கில் மண்டல வாரியாக

பிரத்யேகமாக மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு & மேலாண்மை) பணியிடங்கள் உருவாக்கப்பட்டு தற்போது 14 மாவட்ட வருவாய் அலுவலர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கான நில எடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997–ன் கீழ் நில எடுப்பு பணிகளை துரிதப்படுத்தும் நோக்கில் அச்சட்டத்தின் பிரிவு 3(1) கீழான அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடும் அதிகாரத்தினை நில நிர்வாக ஆணையருக்கு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- நில எடுப்பு பணிகளை கணினிமயமாக்கும் பொருட்டு, நிலம் கையகப்படுத்துதல் மேலாண்மை அமைப்பு (Land Acquisition Management System) உருவாக்கப்பட்டு, அனைத்து சட்டங்களின் கீழான நில எடுப்பு பணிகள் யாவும் தற்போது படிப்படியாக கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.
- நில எடுப்பு பணிகளை மேற்கொள்ளும் பல்வேறு துறைகளின் கள அலுவலர்களுக்கு புத்தாக்க பயிற்சி வழங்கும் விதமாக பிரத்யேக கையேடுகள்

தயார் செய்யப்பட்டு 1276 அலுவலர்களுக்கு கடந்த டிசம்பர் 2021 முதல் மார்ச் 2022 முடிய முதற்கட்டப் பயிற்சி வழங்கப்பட்டதுடன், பிப்ரவரி 2023 முதல் ஏப்ரல் 2023 முடிய 650 பணியாளர்களுக்கு தற்போது இரண்டாம் கட்டப் பயிற்சியானது வழங்கப்பட்டு வருகிறது.

**3.9 வருவாய் நில உடைமை ஆவணங்களை மேம்படுத்துதல்**


வருவாய்த் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் நில ஆவணங்கள் ஏற்கனவே கணினிப்படுத்தப் பட்டுள்ளன. நில ஆவணங்களின் தரத்தை உயர்த்தவும், நில உரிமைகளை உறுதி செய்யும் பொருட்டும், கடந்த பல தசாப்தங்களாக வருவாய், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை துறைகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகியவற்றால் வழங்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான வீட்டு மனைகளுக்கான பயனாளிகளின் பெயர்களை நில ஆவணங்களில் (இணையயம் சார்ந்த தமிழ்நிலம் மற்றும் கொலாப் லேண்ட் ஆகியவற்றில்) சேர்த்து நிகழ்நிலைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், கடந்த காலங்களில் கிராம வருவாய் ஆவணங்களை கணினிமயமாக்கலின் போது பல்வேறு வகையான எழுத்து பிழைகள் மற்றும் தனிநபர்களின் நில உடைமைகளில் தவறான பதிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், அவற்றைக் களையும் விதமாக அரசாணை (நிலை)எண்.644, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 01.10.2021–ன் படி ஊரக பகுதிகளிலும் அரசாணை (நிலை) எண்.612, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 01.10.2021–ன் படி நகர் புறப் பகுதிகளிலும் தமிழ் நில இணையதளத்தில் மாவட்ட ஆட்சியர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் மூலமாக மேற்கண்ட பிழைகளை சரிசெய்யும் பொருட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. நில மாற்றம் மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை சம்பந்தப்பட்ட கேட்புத் துறைகள்/ அமைப்புகளின் பெயரில் தமிழ்நில இணைய ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4. நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நில உடைமைகளில் ஏற்பட்ட ஏற்ற தாழ்வுகளை நீக்கும் பொருட்டு 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் (நில உச்சவம்பு நிர்ணயித்தல்) சட்டம் இயற்றப்பட்டது. இந்நோக்கத்தின் அடிப்படையில் விவசாய நிலங்களுக்கான நில உச்சவரம்பு சட்டம், குத்தகைச் சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியச் சட்டம், பூமிதான சட்டம் மற்றும் வேளாண்மை வருமானவரி தொடர்பான பணிகள் நிலச்சீர்திருத்த ஆணையரகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4.1 நிலச்சீர்திருத்தத் துறையின் நிருவாக கட்டமைப்பு :-



## 4.2 நிலச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் உள்ள உச்சவரம்பு

1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (நில உச்சவம்பு நிர்ணய) சட்டம் 58/1961–இன்படி ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 தர ஏக்கர் (Standard Acre) நிலமும், கூடுதலாக உள்ள நபர்கள் ஒவ்வொருவருக்கும் 5 தர ஏக்கர் நிலமும், ஒரு குடும்பத்திற்கு அதிகபட்ச உச்சவரம்பாக 60 தர ஏக்கர் நிர்ணயம் செய்யப்பட்டது. பின்னர் அதிகபட்ச உச்சவரம்பு 40 தர ஏக்கராக குறைக்கப்பட்டது.

சட்டம் நடைமுறைக்கு வந்த நாளன்று, குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பெண் உறுப்பினர் பெயரில் நிலம் இருப்பின், தலா 10 தர ஏக்கர் சீதன நிலமாக அனுமதிக்கப்படுகிறது.

இச்சட்டத்தில் 1970–ம் ஆண்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஐந்து நபர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கான உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராக குறைக்கப்பட்டது. மேலும் குடும்பத்தின் அதிகபட்ச உச்சவரம்பு 40 தர ஏக்கரிலிருந்து 30 தர ஏக்கராக குறைக்கப்பட்டது.

## 4.2.1. தற்போது நடைமுறையிலுள்ள நிலஉச்சவரம்பு

| வ. எண் | வகைபாடு | அனுமதிக்கப்பட்ட பரப்பு |
|---|---|---|
| 1. | தனிநபர், வர்த்தக நிறுவனம், சொசைட்டி, தனியார் அறக்கட்டளை, நிறுவனம் | 15 தர ஏக்கர் |
| 2. | 5 நபர்கள் கொண்ட ஒரு குடும்பம் (ஐந்து நபருக்கு மேல் உள்ள ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு 5 தரஏக்கர் கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது.<br><br>ஒரு குடும்பத்திற்கான அதிகபட்ச உச்சவரம்பு | 15 தர ஏக்கர்<br><br>30 தர ஏக்கர் |
| 3. | ஒவ்வொரு பெண் உறுப்பினருக்கும் 15.02.1970 அன்று நிலங்கள் அவர்களது பெயரில் இருந்தால், சீதனமாக அனுமதிக்கப்படும் பரப்பு | 10 தர ஏக்கர் |
| 4. | 01.03.1972 தேதியில் இருந்த மதசார்பான பொது அறக்கட்டளை (Public Trust of Religious Nature) | சட்டத்திற்குள் வராது |
| 5. | 01.03.1972 தேதியில் இருந்த தர்மஸ்தாபன பொது அறக்கட்டளை (Public Trust of Charitable Nature) | 5 தர ஏக்கர் |
| 6. | 01.03.1972 தேதிக்கு பிறகு தோற்றுவிக்கப்பட்ட பொது அறக்கட்டளைகளுக்கான உச்சவரம்பு | இல்லை (ஆனால் திருத்தப்பட்ட சட்டம் 29/87-சட்டத்தின்-படி ஒரு பொது அறக்கட்டளை கல்வி மற்றும் மருத்துவ பயன்பாட்டிற்கு நிலங்கள் வைத்துக் கொள்ள அரசால் அனுமதிக்கப்படுகிறது) |

### 4.2.2 தொழில் / வணிக நிறுவனங்களுக்கு அனுமதி

- தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், 15 தர ஏக்கர் உச்சவரம்பிற்கு மிகையாக உள்ள நிலங்களை, தொழில் மற்றும் வணிக நோக்கங்களுக்காக வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக் கொள்வதற்கு நிலச்சீர்திருத்தச் சட்டப்பிரிவு 37–A மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.
- திருத்திய சட்டம் 24/2018– இன்படி, புஞ்சை நிலம் மட்டும் வைத்திருந்து ரூபாய் 20 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உச்சவரம்பு 30 தர ஏக்கராக உயர்த்தப்பட்டுள்ளது.
- தொழில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு வேளாண் சார்ந்த தொழில், ஆட்டோமொபைல், சூரிய மின்சக்தி, காற்றாலை மற்றும் பல தொழில் புரியும் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்டப் பிரிவு 37–A இன்கீழ் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.
- தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த

நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

- தற்போது 37–A–இன் கீழ் அனுமதி பெறும் நடைமுறை எளிமையாக்கப்பட்டு நிறுவனங்கள் இணைய வழி மூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அனுமதி வழங்கும் நடைமுறையில் காலவிரையம் குறைக்கப்பட்டுள்ளது.

### 4.2.3 பொது அறக்கட்டளைகளுக்கு அனுமதி

- பொது அறக்கட்டளைகள், கல்வி அல்லது மருத்துவமனை பயன்பாட்டிற்காக நிலங்களை வாங்குவதற்கு அல்லது வாங்கிய நிலங்களை வைத்துக் கொள்வதற்கு நிலச்சீர்திருத்தச் சட்டப் பிரிவு 37–B மற்றும் விதிகளின்படி அரசால் அனுமதி வழங்கப்படுகிறது.
- இதற்கு, பொது அறக்கட்டளைகள், திருத்தப்பட்ட விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அல்லது நிறுவனம் நிலத்தை வாங்கிய நாளிலிருந்து 180 நாட்களுக்குள் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

- 37–B இன் கீழ் அனுமதி பெறும் நடைமுறையை எளிமையாக்கும் நோக்கில் இணைய வழி மூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

**4.3 வருவாய் நீதிமன்றங்கள்**

நில உடைமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகளை, குத்தகைச் சட்டங்களின் கீழ் முடிவு செய்வதற்காக, தற்போது மாநிலத்தில் பத்து வருவாய் நீதிமன்றங்கள் கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், மன்னார்குடி, திருச்சிராப்பள்ளி, லால்குடி, நாகப்பட்டினம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை நீதிமுறைச் சார்புடைய அதிகாரத்துடன் தனித்துணை ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

**4.3.1 குத்தகைச் சட்டங்கள்**

இச்சட்டங்கள் பின்வரும் வருவாய் நீதிமன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**i. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், 1955 (தமிழ்நாடு சட்டம் 25/55)**

நில உடைமையாளருக்கு குத்தகை தொகை கொடுக்காமல் இருத்தல், குத்தகை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், வேளாண்மை அல்லது தோட்டபயிர் அல்லாத பிற காரணத்திற்கான நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையை மறுத்தல் தவிர, வேறு காரணங்களுக்காக குத்தகைதாரர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பு அளிக்கின்றது. இது தொடர்பாக நில உடைமைதாரர் மற்றும் குத்தகைதாரர்களுக்கு இடையே ஏற்படும் வழக்குகளை வருவாய் நீதிமன்றங்கள் முடிவு செய்கின்றன.

**ii. தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956 (தமிழ்நாடு சட்டம் 24/56)**

இச்சட்டம், மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு மட்டும் நில உரிமைதாரருக்கு பயிரிடும்

குத்தகைதாரர்களால் செலுத்ததப்பட வேண்டிய குத்தகைத் தொகையை நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகைத் தொகையை பணமாகவோ அல்லது விளை பொருள்களாகவோ செலுத்தலாம். பயிரிடும் செலவுகள் அனைத்தையும் குத்தகைதாரர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த நிலத்திற்கான அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைகளுக்கும் நில உரிமையாளர்கள் பொறுப்பு ஆவார்கள்.

iii. **தமிழ்நாடு பொது அறக்கட்டளை (வேளாண்மை நிலங்கள் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1961 (தமிழ்நாடு சட்டம் 57/61)**

இச்சட்டம், பொது அறக்கட்டளைகள் வேளாண் நிலங்களை சொந்தமாக சாகுபடி செய்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் முதலியவைகளுக்கு வகை செய்கிறது. மேலும், பொது அறக்கட்டளைக்கும் அவற்றின் பயிரிடு குத்தகைதாரர்களுக்கும் இடையேயான உறவை ஒழுங்குபடுத்தவும் வகை செய்கிறது. பொது அறக்கட்டளைகள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் மட்டும் வைத்துக் கொள்ளலாம். மீதமுள்ள நிலத்தை பிறருக்கு குத்தகைக்கு விடவேண்டும். இதில்

ஏற்படும் வழக்குகளை வருவாய் நீதிமன்றங்களால் தீர்வு செய்யப்படுகின்றன.

**iv. தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணம்) சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தின் கீழ், பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களை குத்தகைதாரர்களாக பதிவு செய்து கொள்வதன் மூலம் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின் கீழ் வட்டாட்சியர் குத்தகை உரிமையை பதிவு செய்யும் பதிவு அலுவலர் ஆவார்.

**v. தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம், 1971 மற்றும் திருத்திய சட்டம் 39/90.**

இச்சட்டத்தின்படி, குத்தகைதாரராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ குடியிருப்பு அமைத்து 1.4.1990 தேதியில் குடியிருந்து வரும் விவசாயி அல்லது விவசாயத் தொழிலாளருக்கு குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. சொந்த வீட்டுமனை இல்லாத கிராமபுற கைவினைஞர்களும் இந்த குடியிருப்பு உரிமை பெற இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

### 4.3.2 வருவாய் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளின் விவரம்

**1.4.2022 முதல் 28.02.2023 வரை**

| | | |
|---|---|---|
| 1 | 31.3.2022 அன்று நிலுவையில் இருந்த வழக்குகள் | 3,054 |
| 2 | 1.4.2022 முதல் 28.02.2023 வரை வரப்பெற்ற வழக்குகள் | 2,819 |
| 3 | முடிவு செய்யப்பட்டவை | 3,486 |
| 4 | 28.02.2023 அன்று நிலுவையில் உள்ள வழக்குகள் | 2,387 |

### 4.4 விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்தல்

மாநிலம் முழுவதும், (நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் தவிர) விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு விவசாயப் பணிகளுக்காக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் பொறுத்தவரை தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், 1969–ன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.5 பூமிதான வாரியம்

ஸ்ரீ ஆச்சார்ய வினோபாபாவே அவர்களால் தொடங்கப்பட்ட பூமிதான இயக்கத்தின் மூலம் மாநிலத்தில் 28,050 ஏக்கர் நிலங்கள் பூமிதான இயக்கத்திற்கு தானமாக பெறப்பட்டன. அவ்வாறு தானமாக பெறப்பட்ட நிலங்கள் தமிழ்நாடு பூமிதான யக்ஞச் சட்டம், 1958–இன்படி வரன்முறை செய்யப்பட்டு நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த பூமிதான நிலங்கள் பூமிதான வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பூமிதான நிலங்களை முறைகேடான முறையில் விற்பனை செய்வதை தடுக்கும் பொருட்டு தமிழகத்தில் உள்ள பூமிதான நிலங்களின் நிலமதிப்பு '0' மதிப்பீடாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

பூமிதான நிலங்களை பூமிதான யக்ஞச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)–ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கருத்துருக்கள் பெறப்பட்டு பூமிதான வாரிய தீர்மானத்தின் பேரில் நிலமற்ற ஏழைகளுக்கு விவசாயத்திற்காகவோ, வீட்டுமனைகளுக்காகவோ அல்லது பொது

நோக்கத்திற்காகவோ வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டில் 11.72 ஏக்கர் பூமிதான நிலங்கள் தகுதியின் அடிப்படையில் 224 பயனாளிகளுக்கு விவசாயம் மற்றும் வீட்டுமனைகளுக்காகவும் பூமிதான வாரியத்தின் ஒப்புதலின் பேரில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பொது நோக்கங்களுக்காக 3 அரசு துறைகளின் பயன்பாட்டிற்காக 111.27 ஏக்கர் பூமிதான நிலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பூமிதான நிலங்களை தகுதியற்ற நபர்கள் ஆக்கிரமிப்பு செய்த நிலையில் அதனை அகற்றுவதற்கான துரித நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு 1.4.2022 முதல் 28.2.2023 வரை சுமார் 128.28 ஏக்கர் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளன.

### 4.6 நீடித்த வளர்ச்சி இலக்கு 2030 – நிலச்சீர்திருத்தத் துறையின் பங்கு.

நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் 2030இன் நோக்கம் 17 இலக்குகள் உள்ளடக்கப்பட்டது. அதில் முக்கியமானது வறுமை ஒழிப்பையும், நலவாழ்வு மற்றும் கல்வியறிதலை மேம்படுத்துவதையும்,

சமமற்றத் தன்மையைக் களைவதையும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் மட்டுமல்லாது காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதையும், காடுகள் மற்றும் கடல்களைப் பாதுகாப்பதையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டது.

| | | |
|---|---|---|
| நீடித்த வளர்ச்சி இலக்கு 1 | : | அனைத்து இடங்களிலும் அனைத்து வகையிலான ஏழ்மையை ஒழித்தல். |
| நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4 | : | 2030ஆம் ஆண்டிற்குள், குறிப்பாக ஏழைகள் மற்றும் எளிதில் சுரண்டலுக்குள்ளாகும் மக்கள் உட்பட அனைத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொருளாதார வளங்கள், அடிப்படை வசதிகளைப் பயன்படுத்துதல், நிலத்தின் மீதான உரிமை, பாரம்பரியம், இயற்கை வளங்கள், உரிய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சிறு மூதலீடுகளை உள்ளடக்கிய நிதியுதவிகள் வழங்குவதை உறுதிசெய்தல். |

நிலச்சீர்திருத்தத் துறை, துறை சார்ந்த திட்டங்களின் வாயிலாக ஏழை எளிய மக்களுக்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. நில உச்சவரம்புச் சட்டத்தின் வாயிலாக நிலமற்ற கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலங்கள் வழங்கப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் வாயிலாக வேளாண் நில

உரிமையின்பாலுள்ள வேறுபாடுகள் களையப்பட்டு ஏழை கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகிறது. மேலும் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பூமிதான நிலங்கள் வினியோகத்தின் வாயிலாக வேளாண் வளர்ச்சியையும், வறுமை ஒழிப்பையும் அடைய ஆவன செய்கிறது.

இதுவே, மேற்காணும் நீடித்த வளர்ச்சி இலக்கு 1 மற்றும் நீடித்த வளர்ச்சி குறிக்கோள் 1.4–ல் கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடைவதற்கான வழி வகையாகும். இந்த இலக்கு மற்றும் குறிக்கோளின் அடிப்படையில் இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் வேளாண்மை சார்ந்த பல்வேறு பணிகளில் ஈடுபடும் வேளாண்மை தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியை நிர்ணயிப்பதன் வாயிலாக, ஏழைத் தொழிலாளர்களை பாதுகாத்து நியாயமான கூலியை வழங்க வழிவகை செய்யப்படுகிறது.

## 5. நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி

இத்துறை தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச்சட்டம் 1966/ திருத்தச் சட்டம் 1991 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978 ஆகிய இரு சட்டக் கூறுகள் தொடர்பான பொருளைக் கையாளும் பணிகளைச் செய்து வருகிறது. தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1978, 16.06.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டு விட்டது.

<u>**துறையின் படிநிலை**</u>

**முதன்மைச் செயலாளர் / ஆணையர்**
**நிலச் சீர்திருத்தம்**

**இயக்குநர், நிலச் சீர்திருத்தம் / நகர்ப்புற உச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரி**

**உதவி ஆணையர் (தலைமையிடம்)**
ஆணையகரத்தில் இரண்டாம் நிலை அதிகாரி, தலைமை அலுவலகத்தை நிர்வகித்தல்

**உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி)**
மயிலாப்பூர்–தி.நகர்

**உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி)**
எழும்பூர் – தண்டையார்ப்பேட்டை

**உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி) காஞ்சிபுரம் மாவட்டம்**
1. ஆலந்தூர்
2. தாம்பரம்
3. குன்றத்தூர்
4. காஞ்சிபுரம்

**உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி) திருவள்ளூர் மாவட்டம்**
1. பூந்தமல்லி
2. அம்பத்தூர்
3. மாதவரம்
4. வேலூர் மாநகராட்சி

**உதவி ஆணையர்(நகர்ப்புற நிலவரி) கோயம்புத்தூர்**
1. கோயம்புத்தூர்
2. சேலம்
3. ஈரோடு
4. மேட்டூர்,
5. திருப்பூர்,
6. பொள்ளாச்சி
7. உதகமண்டலம்
8. நாமக்கல்
9. உடுமலைப்பேட்டை

**உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி) திருச்சி**
1. திருச்சி
2. புதுக்கோட்டை
3. கடலூர்
4. விழுப்புரம்
5. தஞ்சாவூர்
6. கும்பகோணம்
7. மயிலாடுதுறை
8. கரூர்

**உதவி ஆணையர் (நகர்ப்புற நிலவரி) மதுரை**
1. மதுரை
2. திருநெல்வேலி
3. திண்டுக்கல்
4. பழனி
5. கொடைக்கானல்
6. காரைக்குடி
7. தூத்துக்குடி
8. நாகர்கோயில்
9. இராஜபாளையம்

**5.1 தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978**

நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் நகர்ப்புற நிலம் ஒரு சிலரிடம் குவிந்து கிடந்து அவர்கள் லாப நோக்கத்துடன் வாங்குவது மற்றும் விற்பதை தடுத்து நிறுத்தும் வகையில் நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பு நிர்ணயிக்கும் நோக்குடன் (ஒன்றிய அரசு சட்டம் 24/1976–இன் அடிப்படையில்) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978 இயற்றப்பட்டது. பிறகு 1978–இல் திருத்தியமைக்கப்பட்டு. 03.08.1976 முதல் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது .

இச்சட்டம் சென்னை. மதுரை. கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகர்ப்புற கூட்டுப்பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது.

1999–ஆம் ஆண்டு, முதன்மைச் சட்டம் 1978, தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999 (தமிழ்நாடு சட்டம் 20/99)–இன் மூலமாக, 16.06.1999 முதல் நீக்கறவு செய்யப்பட்டது. முதன்மை சட்டத்தின் கீழ் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டு 16.06.1999–க்கு

முன்னர் அரசு வசம் சுவாதீனம் பெறப்பட்ட நிலங்களுக்கு இந்நீக்கறவு சட்டம் பொருந்தாது.

ஒதுக்கீட்டு கோரிக்கையின் பேரில் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் அரசுத்துறை, அரசுக்கழகங்கள், பொதுத்துறை நிறுவனம், வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மற்றும் இதர நிறுவனங்களுக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 5.2 அறியாக்கிரயம் பெற்றோர் திட்டம்

இது போன்ற நகர்ப்புற மிகை வெற்று நிலங்களை நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள் பற்றிய விவரம் அறியாது கிரையம் வாங்கியிருப்போரின் துயர்துடைப்பதற்காக 1998–ஆம் ஆண்டு இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு அளிக்க அரசு முடிவு செய்து அரசாணை எண். 649, வருவாய்த் துறை, நாள் 29.07.2008 வாயிலாக "அறியாக் கிரயம் பெற்றோர்" திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மேற்காணும் அரசாணைக்குப் பதிலாக திருத்திய விதிகள் / நெறிமுறைகளுடன் கூடிய அரசாணை எண்.565, வருவாய்த் துறை, நாள் 26.09.2008 பிறப்பிக்கப்பட்டது.

இதுவரை 5321 இனங்களில், அறியாக் கிரயதாரர்களால் ரூ. 41.97 கோடி நிலமதிப்புத் தொகை அரசு கணக்கில் செலுத்தியதின் பெயரில் 12.11 இலட்சம் சதுர மீட்டர் விஸ்தீரண நிலம் வரன்முறை செய்யப்பட்டுள்ளன.

## 5.3 தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் 1966

அரசுக்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், மக்கள் அதிக நிலங்களை வாங்கி வைத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டும் தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் முதன் முதலில் 01.07.1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் எல்லா நகர்ப்புற நிலங்களுக்கும் சந்தை மதிப்பில் 0.4 சதவீதம் நகர்ப்புற நிலவரியாக விதிக்கப்பட்டது.

மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 01.07.1971 முதல் இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டது. மேலும் இச்சட்டம் 1975–இல் திருத்தப்பட்டு சென்னை நகர எல்லையிலிருந்து 16 கி.மீட்டருக்கு உட்பட்ட புறநகர்ப்பகுதிக்கு 01.07.1975 முதலும் பின்னர் திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்கு 01.07.1981 முதலும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது.

1991 ஆம் ஆண்டு இச்சட்டம் கடைசியாகத் திருத்தம் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி திருத்தச் சட்டம் 1991–ன்படி மேலும் 21 நகராட்சிகளுக்கும் 2 நகரியங்களுக்கும் 01.07.1991 முதல் விரிவுபடுத்தப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட அனைத்து நகர்ப்புற பகுதிகளிலும் 01.07.1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 01.07.1991 முதல் வரி விதிப்பு செய்யப்படுகிறது.

**<u>வரிவிதிப்பு வீதங்கள்</u>**

| சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் | | | சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள நிலங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1. | முதல் இரண்டு மனைகள் | வரி இல்லை | 1. | முதல் மூன்று மனைகள் | வரி இல்லை |
| 2. | இரண்டு மனைக்கு மேல் ஐந்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் | 2. | மூன்று மனைக்கு மேல் ஏழு மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவீதம் |
| 3 | ஐந்து மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் | 3. | ஏழு மனைக்கு மேல் பத்து மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவீதம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் | 4. | பத்து மனைக்கு மேல் இருபது மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவீதம் |
| 5. | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் | 5. | இருபது மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவீதம் |

இந்த சட்டத்தின் பிரிவு 29 இன் கீழ் ஒன்றிய மாநில அரசு நிலங்கள், மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள், மயான பூமி நிலங்கள், சாலைகளாக பயன்படும் நிலங்கள், பொது பூங்காக்கள் ஆகியன சட்ட முறையாக விலக்கு பெறுகின்றன. மேலும், பொது வழிபாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் நிலங்கள், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக நிலங்கள் ஆகியவையும் சட்ட முறையாக விலக்கு பெறுகின்றன.

கல்வி அறக்கட்டளைகள், ஆன்மீக நிறுவனங்கள் மற்றும் இன்ன பிற தொண்டு நிறுவனங்கள் தங்கள் நிலங்களுக்கு நகர்ப்புற நிலவரி செலுத்துவதில் 'இடர்ப்பாடு இருப்பின்,' அரசுக்கு மனு

செய்து கொண்டால், பிரிவு 27(1) இன் கீழ் தகுதி அடிப்படையில் வரிவிலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும்,

i. சொந்த குடியிருப்பு வீடுகள் உள்ள நிலங்களுக்கும், இசை அரங்குகள், பொழுது போக்கு கூடங்கள் மற்றும் திரைப்படப்பிடிப்பு அரங்குகள் ஆகியவற்றுக்கு 50% வரிச்சலுகையும்;

ii. திரை அரங்குகளுக்கு 10% வரிச்சலுகையும்

iii. தொழில் மற்றும் வணிகத்துறை அளிக்கும் சான்றின் பேரில் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 25%, பிற நிறுவனங்களுக்கு 10% என வரிச்சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற நிலவரி உதவி ஆணையர்களால் நிர்ணயிக்கப்படும் சந்தை மதிப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டு மனுக்களை விரைவாகத் தீர்வு செய்யும் பொருட்டு அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலர்களையே நகர்ப்புற நிலவரி தீர்ப்பாயமாக அரசு நியமித்துள்ளது.

### 5.4 நகர்ப்புற நிலவரி வசூல் பணி

இதுவரை 1.90 இலட்சம் வரிவிதிப்புதாரர்கள் பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளன. நடப்புப் பசலி ஆண்டான 1432–இல் நகர்ப்புற நிலவரி நடப்புக் கேட்புத் தொகையாக ரூ.18.36 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

i. சென்னை நகரில், 10 தனி வட்டாட்சியர்கள் மற்றும் கோவையில் 1 தனி வட்டாட்சியராலும் வரி வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரி வசூல் பணி குறித்த முன்னேற்றம் ஆணையரால் (ந.பு.நி.உ.(ம) ந.பு.நி.வ) கால முறையாக ஆய்வு செய்யப்படுகிறது.

ii. பிற மாவட்டங்களில் நகர்ப்புற நிலவரி வசூல், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர்கள் நகர்ப்புற நிலவரி அதிகாரிகளாக செயல்பட்டு வரிவசூல் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

## 5.5 நிலச்சீர்திருத்த ஆணையரின் சீராய்வு மற்றும் விலக்களிப்பு அதிகாரம்

இச்சட்டப்பிரிவு 30–இன் கீழ் நிலச்சீர்திருத்த ஆணையருக்கு வரிவிதிப்புதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டும் சீராய்வு மனுக்களை விசாரணை செய்து ஆணை பிறப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.1672, வருவாய்த் துறை, நாள் 19.12.1985–இல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி இந்துசமய அறநிலையத்துறை, வக்பு வாரியம், ஆர்ச் டயசிஸ் மற்றும் தென்னிந்திய திருச்சபை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள ஆன்மிக அறக்கட்டளை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்களுக்கும் ஒன்றிய, மாநில அரசால், பல்கலைக்கழகத்தால் அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கும் சட்டப்பிரிவு 27(1)–இன்கீழ் வரிவிலக்களிக்க நிலச்சீர்திருத்த ஆணையருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

6. நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத் துறை இரண்டு பிரிவுகளை கொண்டுள்ளது (i) நில அளவீடு மற்றும் நிலப் பதிவேடுகளை பராமரித்தல் (ii) நிலவரித் திட்டம் – பல்வேறு சட்டங்களின் கீழ் நிலப் பதிவேடுகளை தயாரித்தல்.

இத்துறை 1858 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துப் புலங்களுக்குமான நில ஆவணங்களை சங்கிலி, நேர்கோணக்கட்டை மற்றும் தியோடலைட் ஆகிய கருவிகளைக் கொண்டு பல்வேறு முறைகளைக் கடைபிடித்து உருவாக்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, தினந்தோறும் ஏற்படும் நிலஉரிமை மாற்றங்களுக்கேற்ப நிலஆவணங்களில் மாற்றங்கள் செய்து பராமரிப்பது மட்டுமல்லாமல், இத்துறை கையினால் தயாரிக்கப்பட்ட நிலஆவணங்கள், புலப்படங்கள், வரைபடங்கள் ஆகியவற்றைக் கணினிப்படுத்தி, பொதுமக்கள் எளிதாக உபயோகிக்கும் வகையில் இணையவழி சேவைக்குக் கொண்டு வந்துள்ளது. நடப்பாண்டில் (2023-24), விடுபட்ட நிலஆவணங்கள் மற்றும் வரைபடங்களைக்

கணினிப்படுத்தி இணையவழி சேவைக்குக் கொண்டு வரவும் மற்றும் நவீனநில அளவைக்கருவிகளான வகையீட்டுப் பூகோள நிலைக்கலன் கருவி (DGPS) மற்றும் மின்னணு நிலஅளவைக் கருவி (ETS) ஆகியவற்றைப் பயன்படுத்தி படிப்படியாக மாநிலம் முழுவதும் நிலஅளவை மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.1 சேவை விநியோகம்

#### i. இணைய வழி பட்டா மாறுதல்

கிராம மற்றும் நகர்ப்புற நில ஆவணங்கள் கணினிப்படுத்தப்பட்டு, தமிழ்நிலம் எனும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலமாக, இணைய வழி பட்டா மாறுதல் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 28.02.2023 வரையில் 37.88 இலட்சம் உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல்கள் (கிராம மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில்) செய்யப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டில் 12,36,555 பட்டா மாறுதல் மனுக்கள் தீர்வு செய்யப்பட்ட நிலையில், 2022 ஆம் ஆண்டில் 53% கூடுதலாக 18,90,983 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. தள்ளுபடி விகிதம் முந்தைய

ஆண்டுகளிலிருந்த 50 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதத்திற்கும் குறைவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**ii. ஆதி திராவிடர் நலத்துறை / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் ஒதுக்கப்பட்ட மனைகள்**

ஆதி திராவிடர் நலத்துறை / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் ஒதுக்கப்பட்ட 981 மனைகள் நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையினால் அளவை செய்யப்பட்டு 1,45,645 உட்பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பழமையான ஆவணங்களை ஒளிபிம்ப நகலெடுத்து பராமரிக்கும் பணி சென்னையில் உள்ள ஆவணக் காப்பகம் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகத்தில் நடைபெற்று வருகிறது. 24.05.2022 முதல் 02.03.2023 வரையில் 4,95,775 தாட்கள் ஒளிபிம்ப நகலெடுத்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

**6.2 நவீன அளவை / மறு அளவை**

i. வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவி ஆகிய நவீன நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி

மாவட்டங்களில் மறு நில அளவைப் பணி நடைபெற்று வருகிறது. மொத்தப் பரப்பளவான 8,185 ச.கி.மீ இல், இது வரையில் 920.89 ச.கி.மீ பரப்பளவிற்கு மறு நில அளவைப் பணி முடிவு பெற்றுள்ளது. இதில், 07.05.2021 முதல் 02.03.2023 வரையான காலத்தில் மட்டும் 710.50 ச.கி.மீ பரப்பளவிற்கு மறுநில அளவைப் பணி முடிவு பெற்றுள்ளது.

ii. வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவியைப் பயன்படுத்தி நீர்நிலைகளை நில அளவை செய்யும் பணி அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது, இது வரையில் 7,016 நீர்நிலைகளின் எல்லைகள் அளவை செய்யப்பட்டு அவற்றில் 1,747 நீர்நிலைகளின் வரைபடங்கள் அரசுத் துறைகள் மற்றும் பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளும் பொருட்டு https://tngis.tn.gov.in/waterbodies/ எனும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

iii. வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி வேலூர் நகரில் நவீன நகரளவைப் பணி நடைபெற்று வருகிறது. மொத்த பரப்பளவான

87.90 ச.கி.மீ ல் இது வரையில் 70.3 ச.கி.மீ அளவிற்கு நில அளவைப் பணி நிறைவு பெற்றுள்ளது. 07.05.2021 முதல் 02.03.2023 வரையில் 23.21 ச.கி.மீ பரப்பளவிற்கு நில அளவைப் பணி செய்யப்பட்டுள்ளது.

### 6.3 நிருவாக சீர்திருத்தங்கள்

**i. இ– அலுவலக நடைமுறை மற்றும் கோப்புகளின் எண்ணிக்கை குறைப்பு**

கோப்புகளின் எண்ணிக்கை குறைப்பு: இ–அலுவலக செயலாக்கத்திற்குப் பின் இவ்வாணையரகத்தில் மொத்த கோப்புகளின் எண்ணிக்கை 5,348 லிருந்து 2,567 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

**ii. இணைய வழியில் மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுத்தல்**

பொதுமக்களிடமிருந்து குறைதீர்ப்பு மனுக்களை அரசின் https://gdp.tn.gov.in எனும் இணைய தளம் வழியாகப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளும் நடைமுறை இத்துறையில் அறிமுகம் செய்யப்பட்டு இதுவரை 1,651 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

## 6.4 பயிற்சி

i. 07.05.2021 முதல் 28.02.2023 வரையில் 730 வருவாய்த் துறை அலுவலர்களுக்கு, உதவி இயக்குநர்களால் 26 சிறப்பு மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ii. இது தவிர, கட்டுமானப் பொறியியல் பட்டயதாரர்களுக்கு, நில அளவை செய்வதற்கான உரிமம் வழங்குவதற்கான, மூன்று மாத கால நில அளவைப் பயிற்சி இரண்டு பயிற்சி நிலையங்களிலும், இதுவரையில் 863 பேருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 350 உரிமம் பெற்ற நில அளவர்கள் இணைய வழி பட்டா மாறுதல் பணியில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மற்றும் 210 பேர் பல்வேறு அரசுத் துறைகளில் பலதரப்பட்ட நில அளவைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## 6.5 நில ஆவணங்களில் பிழைகளைக் களைவதற்கான சிறப்பு செயலாக்க நடவடிக்கைகள்

i. அனைத்து கிராமங்களிலும், நில ஆவணங்களில் உள்ள பிழைகளைக்

களையக்கோரி, நில உரிமையாளர்கள் அளிக்கும் விண்ணப்பங்களைத் தீர்வு செய்வதற்கான சிறப்பு முகாம்கள், ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளிலும் நடத்தப்பெற்று 46,387 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, நில உரிமையாளர்களின் குறைகள் களையப்பட்டுள்ளன.

ii. நகர்ப்புற நில ஆவணங்களைப் பொறுத்த வரையில், கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணத் தரவுகள் நில ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு, பிழைகள் கண்டறியப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 33.12 இலட்சம் நகரப் புல எண்களில், 32.61 இலட்சம் நகரப் புல எண்கள் ஒப்பிடல் செய்யப்பட்டு, இதுவரையில் 7.04 இலட்சம் பிழைகள் கண்டறியப்பட்டு அவற்றில் 6.92 இலட்சம் பிழைகள் நீக்கப்பட்டுள்ளன.

## 6.6 நிலவரித் திட்டம்

வரலாற்று ரீதியாக நிலத்தின் விளைச்சலில் ஒரு பங்கு பொருளாக வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், அவ்வாறு வசூலிப்பது அரசாங்கத்திற்கு சிரமமாக இருந்ததால், மாற்றியமைக்கப்பட்ட

பணமதிப்பு மதிப்பிடப்பட்டு, மதிப்பீடு மற்றும் உரிமையை நிர்ணயிக்கும் செயல்முறை வருவாய் நிலவரித்திட்டம் எனப்படுகிறது.

ஆரம்பத்தில், மண் வகைபாடு செய்யப்படாமல் பாசன ஆதாரங்களைக் கணக்கில் கொள்ளாமல் நிலவரி வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த முறை 'நிலையான நிலவரித்திட்டம்' என அழைக்கப்பட்டது. இந்த முறையை ரத்து செய்து நீர் ஆதாரத்தினை அடிப்படையாக கொண்ட மண் விளைச்சல் மற்றும் மண் வகைபாடு ஆகியவைகளின் அடிப்படையில் நிலவரி நிர்ணயம் செய்யும் முறையான 'இரயத்துவாரி நிலவரித்திட்டம்' 1879–80–ஆம் ஆண்டிலிருந்து அசல் நிலவரித்திட்டம் (Original Settlement) என அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையில், நிலவரி நிர்ணயிப்பதற்காக முதன் முதலாக அரசினால் நிலஅளவை செய்யப்பட்டு, புலவாரியாக வகைப்பாடுகள், மண்வயனம், பாசன ஆதார வகுப்புகள் நிர்ணயிக்கப்பட்டு தரம், தீர்வை நிர்ணயிக்கப்பட்டது. மேலும், புலங்களின் உரிமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பட்டா பதிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இம்முறை முப்பதாண்டுகள் வரை நீடிக்கத்தக்கது.

எனவே, மறுநிலவரித் திட்டம் 30 ஆண்டுகளுக்கு பிறகு அசல் நிலவரித் திட்டம் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசால் தீர்வை வசூலிக்கப்படும் கிராமங்கள் மற்றும் நில உடமைதாரர்களான ஜமீன்தாரர்கள் மற்றும் இனாம்தாரர்களால் தீர்வை வசூலிக்கப்படும் கிராமங்கள் என தீர்வை வசூலிக்கப்படும் முறையைப் பொறுத்து கிராமங்கள் இரு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. எனவே, அசல் நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமங்களில், மறு நிலவரித்திட்டம் (Re–Settlement) அறிமுகப்படுத்தப்–பட்டது.

ஜமீன்தாரர்கள்/ இனாம்தாரர்கள் ஆகியோரிடமிருந்து நில உடமைகளில் அசல் நிலவரித்திட்டம் மற்றும் மறுநிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்படாமல், அவ்வுடமைகளில் நிலையான நிலவரித்திட்டம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. சுதந்திரத்தின்போது ஜமீன் எஸ்டேட், இனாம் மற்றும் மைனர் இனாம் போன்ற சில பகுதிகளைத் தவிர அந்நாளைய மெட்ராஸ் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 6.6.1 பல்வேறு ஒழிப்புச் சட்டங்களின் கீழ் ரயத்துவாரி நிலவரித்திட்டம்

சுதந்திரத்திற்கு பிறகு ஜமீன்/இனாம் மற்றும் இதுபோன்ற பகுதிகளிலிருந்த, சாகுபடி மீதான மதிப்பீட்டு வரியை குறைப்பதற்காகவும் அத்தகைய நில உடமையாளர்கள் என்ற பிரிவினை நீக்கி அக்கிராமங்களை அரசின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வர பல்வேறு நில உடமையாளர்கள் ஒழிப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன.

i. தமிழ்நாடு எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1948, (தமிழ்நாடு சட்டம் 26/1948)–ன்படி அனைத்து எஸ்டேட்டுகளிலும் அரசால் ரயத்துவாரி நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டன. எனினும், வகைபாடு மாற்றம் மற்றும் பட்டா வழங்கப்பட்டது தொடர்பாக சில நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது.

ii. 1802–ஆம் ஆண்டுக்கு முன்பு வரை படைவீரர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், மத ஸ்தாபனங்களுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும், ஊழியர்களுக்கும், துறவிகளுக்கும் மற்றும் அறிஞர்களுக்கும் நில வருவாய் இல்லாமலோ, அல்லது குறைந்த அளவில் நிலவரி நிர்ணயித்தோ, இனாமுக்கான உரிமை பத்திரங்கள்

வழங்கப்பட்டவர்களுக்கு இனாம் எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நிலவரித்திட்டம் அறிமுகப்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963) இயற்றப்பட்டு 4 கிராமங்களைத் தவிர அனைத்துக் கிராமங்களிலும் பட்டா வழங்கப்பட்டது.

iii. ஓர் இனாமுக்கான உரிமை பட்டயத்தில் கிராமத்தின் ஒரு பகுதியை பிராந்திய நில அளவுகளான காணி, ஏக்கர், சென்ட் போன்ற நில அளவுகளிலோ அல்லது மத/தர்ம நிறுவனங்களுக்கு முழு கிராமங்களாகவோ அளிக்கப்பட்ட இனாம் கிராமங்களில், இனாம்தாரர்களின் உரிமையை நீக்கவும் அவற்றில் இரயத்துவாரி நிலவரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 30/1963) இயற்றப்பட்டு 8 கிராமங்கள் தவிர்த்து ஏனைய அனைத்து கிராமங்களிலும் பட்டா வழங்கப்பட்டது. அவற்றில் 1 கிராமத்தில் நீதிமன்ற வழக்கு உள்ளது. மேற்படி இரு சட்டங்களின்படி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி, நிலவரித்திட்டப் பணி நடைபெற்று வருகிறது.

| வ. எண் | கிராமத்தின் பெயர் | அரசாணைகளின் விவரம் | பொருந்தும் சட்டம் |
|---|---|---|---|
| 1. | அரையபுரம் தட்டிமால் படுகை, பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் | அரசாணை (நிலை) எண்.265, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.06.2022 | தமிழ்நாடு இனாம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு சட்டம் 26/1963) |
| 2. | சென்னசந்திரம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | அரசாணை (நிலை) எண்.317, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.07.2022 | |
| 3. | உளியாளம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | | |
| 4. | திம்மசந்திரம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | | |
| 5. | சூரியநாராயணபுரம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் | அரசாணை (நிலை) எண்.265, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.06.2022 | தமிழ்நாடு சிறு இனாம்கள் (ஒழிப்பும் மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1963 (தமிழ்நாடு |

| | | | |
|---|---|---|---|
| 6. | மாரசந்திரம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | அரசாணை (நிலை) எண்.317, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 14.07.2022 | சட்டம் 30/1963) |
| 7. | இளையசந்திரம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | | |
| 8. | பைரசந்திரம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | | |

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், காரணப்பட்டி கிராமத்தில் நிலவரித்திட்டப் பணி முடியும் தருவாயிலும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், நிலையப்பட்டி கிராமத்திலும், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கழனிவாய்ப்பட்டி கிராமத்திலும் நிலவரித்திட்டப் பணி துவங்கப்பட்டுள்ளது.

அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் எஸ்டேட்களில் ஜென்மிகளுக்கு இருந்த உரிமையை நீக்கவும் இரயத்துவாரி நிலவரித்திட்ட முறையை அறிமுகப்படுத்தவும் தமிழ்நாடு கூடலூர் ஜென்மம்

எஸ்டேட்கள் (ஒழிப்பும் மற்றும் இரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம் 1969 (தமிழ்நாடு சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்திலும் அதன் பின் உச்சநீதிமன்றத்திலும் சில குத்தகைதாரர்கள் மற்றும் ஜென்மிகளால் இச்சட்டத்தை முழுமையாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9–வது அட்டவணையில் சேர்க்கப்பட்டதை எதிர்த்து பல வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. கடைசியாக இச்சட்டத்தினை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 9–வது அட்டவணையில் முழுமையாக சேர்க்கப்பட்டதை ஏற்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், நிலவரித்திட்டப் பணிகளை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜென்மம்

நிலங்களில் நிலவரித் திட்டப் பணி முடிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு :–

| வ.எண் | விவரங்கள் | விஸ்தீரணம் (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மொத்த ஜென்மம் நிலங்கள் | 80,087.74 |
| 2. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட மொத்த பரப்பு | 45,101.46 |
| 3. | நிலவரித்திட்டம் முடிக்கப்பட்ட பரப்பில் வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு | 17,014.43 |
| 4. | நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட வேண்டிய பரப்பு [(1)–(2)] | 34,986.28 |

ஆ) இதற்கிடையில் மேற்படி சட்டம் பிரிவு 8, 9, 10–களின் கீழ் பெறப்பட்ட மனுக்களை முடிவு செய்யுமாறு நிலவரித்திட்ட அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலரை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி பெரும்பாலான மனுக்கள் நிலவரித்திட்ட அலுவலரால் முடிவு செய்யப்பட்டுவிட்டன. முடிவு செய்யப்பட்ட இனங்களில் நிலவரித்திட்ட அலுவலரின் உத்தரவுகளுக்கு எதிராக ஜென்மம் ஒழிப்பு தீர்ப்பாயம்/உதகை மாவட்ட நீதிமன்றத்தில் பல மேல்முறையீடு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. கூடலூர் ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்ட

அலுவலர் நிலப்பிரச்சனை முடிவு செய்யப்பட்ட இனங்களில் குத்தகை காலம் முடிவுற்ற நிலங்களை மீட்க உத்தரவிட்டுள்ளார்.

கூடலூர் ஜென்மம் நிலங்களில் நிலவரித்திட்டப் பணிகள் நிலுவையிலுள்ள 34,986.28 ஏக்கர் பரப்பில் குத்தகை காலம் முடிவுற்ற நிலங்களைத் திரும்ப எடுத்தல் மற்றும் அப்புலங்களில் நிலவரித் திட்டம் அறிமுகப்படுத்துதல் தொடர்பாக அரசாணை (D) எண்.73, சுற்றுச்சூழல் மற்றும் வனம் (F.R.14) துறை, நாள் 19.03.2018–இல் 3 நபர்கள் அடங்கிய குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**இ) தீர்வு செய்யப்படாத கிராமங்களில் வருவாய் நிலவரித்திட்டப் பணி**

i. அரசாணை (நிலை) எண்.199, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.அ.–2(2)] துறை நாள் 06.05.2022–இன்படி 1500 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அசல் நிலவரித்திட்ட பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நாரைக்கிணறு கிராமத்திலுள்ள 5 சிறிய பகுதி (bit) நிலங்கள் 1000.46.0 ஹெக்டேர் பரப்பளவு உள்ளடக்கியது. இதில், 583.05.50 ஹெக்டேர்

விவசாய நிலமும், 417.40.50 ஹெக்டேர் நிலம் விவசாயமற்ற நிலத்தினையும் மற்றும் புறம்போக்கு நிலத்தினையும் உள்ளடக்கியுள்ளது.

ii. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், விஜயமாநகரம் மற்றும் புதுக்கூரைப்பேட்டை கிராமங்களில் 1240.88 ஹெக்டேர் பரப்புடைய நிலத்திற்கும் மற்றும் 320.58 ஹெக்டேர் நிலத்திற்கும் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்திற்கு (NLC) நில எடுப்பிற்கு வழங்கப்பட்ட 15 கிராமங்களிலுள்ள 3000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அரசாணை (நிலை).எண்.239, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [நி.அ.–2(1)] துறை நாள் 26.05.2022 –இன்படி நிலவரித்திட்டப் பணி நடைபெற்று வருகிறது.

### 6.6.2 மற்ற திட்டங்கள்

#### i. நத்தம் நிலவரித்திட்டம்

அசல் நிலவரித்திட்டம் மற்றும் மறு நிலவரித்திட்டப் பணிகளின்போது கிராமங்களிலுள்ள குடியிருப்பு பகுதி 'நத்தம்' என வகைபாடு செய்யப்பட்டிருந்தது. நத்தம் புலங்களில் வீட்டு மனைகள் உட்பிரிவு செய்யப்படாமல் மனைப் பட்டா வழங்கப்படாமல் இருந்து வந்தது. எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் இருந்த

நத்தம் புலங்களிலுள்ள வீட்டு மனைகளிலும் விவசாயமில்லாத பிற பயன்பாட்டில் இருந்து வந்த விவசாய நிலங்களிலும், நத்தம் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ளப்பட்டு பட்டா வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

**ii. மலைக்கிராமங்களில் நிலவரித்திட்டப் பணி**

நத்தம் நிலவரித்திட்டப் பணியோ அல்லது நில உடமை மேம்பாட்டு பணியோ மேற்கொள்ளப்படாத மலைக் கிராமங்களில், மறு நிலஅளவைப் பணிகள் முடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிலவரித்திட்டப் பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணி வழக்கு நடைபெறும் 1 கிராமத்தைத் தவிர மற்ற 3 (மூன்று) கிராமங்களில் மட்டும் தற்போது நடைபெற்று வருகிறது.

**iii. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணி**

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளிலும் (பழைய சென்னை நகரம் நீங்கலாக) வருவாய்ப் பதிவேடுகளிலுள்ள பதிவுகளை

இன்றைய நிலையில் மேம்படுத்தவும், நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கவும் மாவட்ட வருவாய் நிர்வாக பராமரிப்பிற்கென நில ஆவணங்களைத் தயாரித்து அளிக்கவும் நகர நிலவரித்திட்டப் பணி தொடங்கப்பட்டது.

இதன்படி, மாநிலத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நகர நிலவரித்திட்டப் பணி அரசாணை (டி) எண்.103, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 01.03.2007–இன்படி மேற்கொள்ளப்படவேண்டும். இவற்றுள் 3 மாநகராட்சிகள் 52 நகராட்சிகளில் முழுவதுமாக இப்பணி முடிக்கப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நகர நிலவரித்திட்டப் பணி 13 மாநகராட்சிகளிலும் (21 அலகுகள்) 28 நகராட்சிகளிலும் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள நகராட்சிகள்/ மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், தற்போது பணி நடைபெற்று வரும் அலகுகளின் பணிகள் முடிக்கப்பட்டவுடன், அவ்வலகின் பணியிடங்கள் பணி தொடங்க வேண்டிய புதிய நகரத்தில் மறு அமர்வு செய்யப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும். இதுவரையிலும் 17,30,249 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.6.3 வக்ஃப் சொத்து கணக்கெடுப்புப் பணி

வக்ஃப் சட்டம் 1995 பிரிவு 4–ன்படி, மாநிலம் முழுவதும் வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வக்ஃப் சொத்து கணக்கெடுப்பு ஆணையாளராக நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரும் அவரது கட்டுப்பாட்டில், வக்ஃப் கூடுதல் ஆணையர்களாக மாவட்ட வருவாய் அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பணி இதுவரை 32 மாவட்டங்களில் முடிக்கப்பட்டு மீதமுள்ள மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

## 7. தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையானது அனைத்துத் துறைகளின் தாய்த்துறையாக பழங்காலம் தொட்டு திகழ்கிறது. மாவட்ட நிருவாகத்தின் மூலம், அனைத்துப் பிரிவினருக்கும் அத்தியாவசிய சேவைகளை வழங்கி வருகிறது.

இத்துறை, பல்வேறு பிரிவுகளின் சேவைகளைத் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வழங்கும் பொருட்டு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. பொதுமக்கள் அரசின் சேவைகளைப் பெற அலுவலகத்தை நாடிவரும் நிலையை மாற்றி, எங்கிருந்தும் எந்நேரத்திலும் தடையற்ற சேவைகளை வழங்குவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

### 7.1 வழி காட்டும் குழு

அரசாணை (டி) எண். 521, வருவாய் மற்றும் மேலாண்மைத் துறை, நாள். 10.08.2022–இன்படி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையில் அனைத்து மின்ஆளுகை திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதை கண்காணித்து வழி நடத்திட நிலநிர்வாக ஆணையர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 7.2. வருவாய்த்துறை சார்ந்த சான்றிதழ்கள் மற்றும் உரிமச் சான்றிதழ்கள்

மின் ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்ட வலைதளம் வழியாக பெறப்படும் விண்ணப்பங்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் பின்வரும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது:–

1. சாதிச் சான்றிதழ்.
2. வருமானச் சான்றிதழ்
3. இருப்பிடச் சான்றிதழ்.
4. முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ்.
5. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சான்றிதழ்.
6. விவசாய வருமானச் சான்றிதழ்
7. கலப்புத் திருமணச் சான்றிதழ்.
8. விதவைச் சான்றிதழ்.
9. வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்.
10. குடிபெயர்வு சான்றிதழ்.
11. சிறு குறு விவசாயி சான்றிதழ்
12. இயற்கை இடர்பாடுகளினால் மாணவர்கள் பள்ளி (ம) கல்லூரி சான்றிதழ்களை இழந்தமையை உறுதி செய்யும் சான்றிதழ்.
13. திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்

14. ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்.
15. வாரிசு சான்றிதழ்.
16. வசிப்பிடச் சான்றிதழ்.
17. சொத்து மதிப்பு சான்றிதழ்.
18. அடகு வணிகர் உரிமம் சான்றிதழ்.
19. கடன் கொடுப்போர் உரிமம்..
20. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வகுப்புச் சான்றிதழ்.
21. பொருளாதாரத்தில் பின்தங்கியவர் என்பதற்கான சான்றிதழ். (வருமானம் மற்றும் சொத்துகள்)
22. ஆதரவற்ற விதவை சான்றிதழ்.
23. ஜெயின் மதத்தினருக்கான சிறுபான்மையினருக்கான சான்றிதழ்.
24. பொது கட்டிடங்கள் உரிமம் குறித்த சான்றிதழ்
25. தற்காலிக பட்டாசு உரிமம் குறித்த சான்றிதழ்
26. நிரந்தர பட்டாசு உரிமம் குறித்த சான்றிதழ்
27. எரிபொருள் நிலையங்களுக்கான தடையில்லா சான்றிதழ்.

01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான காலங்களில் 1,68,18,044 வருவாய்த் துறை சான்றிதழ்கள் இ-சேவை மூலம் பொதுமக்களுக்கு

வழங்கப்பட்டுள்ளது. தற்போது இணையவழி அல்லாது வழங்கப்படும் பிற சான்றிதழ்கள் அனைத்தும் 2023-2024 நிதியாண்டில் இணையவழியில் வழங்க வழிவகை செய்யப்படும்.

### 7.3 சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக பாதுகாப்பு திட்ட ஓய்வூதியங்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் அதன் மீது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. கருவூலம் மற்றும் பயனாளிகளுக்கு பணம் வழங்குவது தொடர்பான அனைத்து பணிகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. விபத்து நிவாரணத் திட்டம் மற்றும் பேரிடர் நிவாரணத் திட்டம் போன்ற மீதமுள்ள சேவைகளும் நடப்பு ஆண்டில் கணினிமயமாக்கப்படவுள்ளது.

## 7.4 நில ஆவணங்கள் தொடர்பான சேவைகள்

மாநிலத்தின் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு மேம்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் எளிதில் அணுகக்கூடிய நிலப் பதிவுகள் அவசியமானதாகும்.

### 7.4.1 நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல்

பல்வேறு காலக்கட்டங்களில் நிலப் பதிவுகள் பல வகைகளில் தீர்வு செய்ப்பட்டு மற்றும் நில ஆவணங்காளக பராமரிக்கப்பட்டு காகிதவடிவில் இருந்து வந்துள்ளது. குடிமக்களுக்கு பலவித சேவைகளை வழங்கிடுவதற்கும், நில நிர்வாக செயல்முறைகளை கணினிமயமாக்குவதற்கும் உரை மற்றும் இடம்சார்ந்த பதிவுகளை கணினிமயமாக்குவது மிக அவசியமானதாகும். அவற்றின் கணினிமயமாக்கலின் நிலை பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:–

**i. நில ஆவணங்களைக் கணினிப்படுத்துதல் எழுத்துருவிலான நில ஆவணங்களைக் கணினிப் படுத்துதல் (மாற்றியமைக்கத் தக்கது)**

| ஆவண வகை | ஆவணத்தின் பெயர் | கணினிப்படுத்துதல் | இணைய வழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை (மின்சேவை மற்றும் அலைபேசி செயலி மூலமாக பொது மக்கள் பார்வையிடும் வசதிஉள்ளவை) |
|---|---|---|---|
| கிராமம் | அ–பதிவேடு மற்றும் சிட்டா | 311*/ 313 வட்டங்கள் 4.03 கோடி (வால்பாறை * (ம) கொல்லிமலை ** வட்டங்கள் மற்றும் இதர விடுபட்ட புல எண்கள்தவிர்த்து) | ஆம் (அனைத்து மாவட்டங்களும்) |
| நகர்ப்புறம் | நகரநிலப் பதிவேடு/ நிலையான நிலஆவணம் | 14 / 14 வட்டங்கள் 90 / 90 நகராட்சிகள் 21 / 21 மாநகராட்சிகள் (37.87 இலட்சம்) | ஆம் (அனைத்து மாவட்டங்களும்) |
| நத்தம் | அடங்கல் | 1.44 கோடி / 1.44கோடி ஆவணங்கள் (2018 வரைநிகழ்நிலைப்ப டுத்தப்பட்டவை) | இல்லை (மென்பொருள் தேசிய தகவலியல் மையத்தினால் உருவாக்கப்பட உள்ளது) |

* _ வால்பாறை – நீதிமன்றவழக்கின் காரணமாக நிலவரித்திட்டப்பணி நிலுவையிலுள்ளது

** _ கொல்லிமலை – 10/16 கிராமங்களில் நிலவரித்திட்டப்பணி நிறைவு பெற்று தரவினை சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. 6/16 கிராமங்களில் நிலவரித் திட்டப்பணி நடைபெற்று வருகிறது.

## ii. கையினால் தயாரிக்கப்பட்ட நிலப் பதிவுருக்கள் (ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்டவை – மாற்றியமைக்கத் தக்கதல்ல)

| ஆவண வகை | ஆவணத் தின் பெயர் | ஒளிபிம்ப நகலெடுக்கப் பட்டவை | இணைய வழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை |
|---|---|---|---|
| கிராமம் | அ– பதிவேடு | 15,356 / 16,721 (கிராமங்கள்) | இல்லை (மென்பொருள் உருவாக்கப்பட்டு வருகிறது) |
| நகர்ப்புறம் | நகரநிலஆவணம் | அலுவலக பயன்பாட்டிற்காகத் தொடங்கப் படவுள்ளது | இல்லை |
| | நிலையான நில ஆவணம் | | |
| நத்தம் | அடங்கல் | அலுவலக பயன்பாட்டிற்காகத் தொடங்கப் படவுள்ளது | இல்லை |

### iii. நில ஆவணங்களை கணினிப்படுத்துதல் – வரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டவை (மாற்றியமைக்கத்தக்கவை)

| ஆவண வகை | ஆவணத் தின் பெயர் | கணினிப்படுத்தப்பட்ட வை | இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை |
|---|---|---|---|
| கிராமப்புறம் | புலப்பட புத்தகம் (நத்தம் உள்ளிட்டவை) | 55.20 இலட்சம் / 55.20 இலட்சம் (100%) | ஆம் (100 %) மின்சேவையில் உள்ளது |
| | கிராம வரைபடம் | 16,524 / 16,721 கிராமங்கள் (98.8%) | இல்லை |
| நகர்ப்புறம் | பிளாக் வரைபடம் | 32.04 இலட்சம் / 34.74 இலட்சம் நகரப்புல எண்கள் (92%) | இல்லை |
| | நகர புல வரைபடம் | கணினிப்படுத்தப்பட்ட பிளாக் வரைபடங்களிலிருந் து உருவாக்கப்பட்டு வருகிறது | 142 நகரங்களுக்கான நகரப் புல வரைபடங்கள் இணைய வழி சேவைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. |

**iv. கையினால் தயாரிக்கப்பட்ட வரைபடங்கள் – ஒளிபிம்ப நகலெடுக்கப்பட்டவை (மாற்றி அமைக்கத்தக்கதல்ல)**

| ஆவண வகை | ஆவணத்தின் பெயர் | ஒளிபிம்ப நகலெடுக்கப்ப ட்டவை | இணையவழி சேவைக்கு கொண்டு வரப்பட்டவை |
|---|---|---|---|
| கிராமம் | புலப்பட புத்தகம் (நிலப் பதிவுருக்கள் மேம்பாட்டுத் திட்டம்) | 9,783 / 16,721 கிராமங்கள் | இல்லை |
| | கிராம வரைபடம் (நிலப் பதிவுருக்கள் மேம்பாட்டுத் திட்டம்) | 16,721 கிராமங்கள் (100%) | ஆம் |
| நகர்ப்புறம் | பிளாக் வரைபடம் (மூலநகராள வை) | 19,401 / 27,959 பிளாக்குகள் (69.4%) | ஆம் |

## 7.4.2 குடிமக்கள் சேவைகள் – பட்டா மாறுதல்

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு பட்டா மாறுதல் தொடர்பான சேவகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. 2023–24–ஆம் ஆண்டில் நத்தம் பகுதிகளில் பட்டா மாறுதல் தொடர்பான சேவைகள் முழுமையாக கணினிமயமாக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் இணைய தளம் வாயிலாக மற்றும் பொது சேவை மையம்மூலமாக பட்டா மாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

### 7.4.3. இணைய வழி சேவைகள் தொடங்கப்பட்டவை

i. பொதுமக்கள் இணையம் வாயிலாக எங்கிருந்து வேண்டுமானாலும் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பிப்பதற்கான சேவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.09.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

ii. உட்பிரிவு இல்லாத பட்டா மாறுதல் பரிவர்த்தனைகளில், பத்திரப் பதிவு முடிவடைந்தததும், வருவாய்த்துறையில் குறுக்கீடு ஏதுமின்றி, நில உரிமை மாற்றங்கள் தானியங்கி பட்டா மாறுதல் முறையில் மேற்கொள்ளப்படுவது ஒரு புதுமையான முனைவு ஆகும். முறைகேடான செயல்களை ஒழிப்பதில் இந்நடைமுறை பெருமளவில் உதவிகரமாக உள்ளது. 07.05.2021 முதல் 02.03.2023 வரை, 3,04,230 பட்டா மாறுதல்கள் தானியங்கி முறையில் செய்யப்பட்டுள்ளன.

iii. மாநிலத்தில், மொத்தமுள்ள 183 நகரங்களில் 142 நகரங்களுக்கான புலப்படங்கள் இணையவழிப் படுத்தப்பட்டுள்ளன. எஞ்சிய 41 நகரங்களுக்கான புலப்படங்களை இணைய வழிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iv. பொதுமக்கள் கிராம வரைபடங்களை https://tnlandsurvey.tn.gov.in/ இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

v. 'அ' பதிவேடு சிட்டா, புலப்படம் மற்றும் அடங்கல் ஆவணங்களின் விவரங்களை உள்ளடக்கிய 'ஒருங்கிணைந்த நில ஆவணம்' இணையவழிப்படுத்தப்படத் தயார் நிலையில் உள்ளது.

### 7.4.4 இணையவழி சேவைகள் – நடைமுறையில் உள்ளவை

பின்வரும் மின் ஆளுமை முயற்சிகள் நடைபெற்று வருகின்றன:–

'அ' பதிவேடு, சிட்டா, புல வரைபடம் மற்றும் அடங்கல் அடங்கிய ஒருங்கிணைந்த நிலப்பதிவு உருவாக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தயாராக உள்ளது.

நிலங்களை அளவீடு செய்வதற்கு (அதாவது, சர்வே எல்லைகளை சுட்டிக்காட்டுவதற்கு) ஆன்லைன் முறையில் விண்ணப்பம் செய்யும் வசதி உருவாக்கப்பட்டு, விரைவில் தொடங்கப்படவுள்ளது,

நத்தம் நிலப் பதிவேடுகளை ஆன்லைனில் செயலாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் இணைய அடிப்படையிலான மென்பொருள் உருவாக்கத்தில் உள்ளது.

திட்டமிடல் நோக்கங்களுக்காக தேவைப்படும் துறைகளுடன் பகிர்ந்து கொள்வதற்காக, டிஜிட்டல் மயமாக்கப்பட்ட கிராம வரைபடங்களின் புவி–குறிப்பு, வேளாண்மைத் துறையுடன் இணைந்து பின்பற்றப்படுகிறது.

பட்டா மாறுதல் மேல்முறையீட்டு மேலாண்மை மென்பொருளை மாற்றுவதற்கு, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் ஒரு முழுமையான மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது, இதன் பின்னர், மேல்முறையீடுகள் இணையவழியில் தாக்கல் செய்யலாம்.

### 7.5 நில நிருவாகம்

**7.5.1. நிலம் கையகப்படுத்துதல் மேலாண்மை அமைப்பு**
தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்டு சில தொகுதிகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இது பணியாளரின் பணி மற்றும் பணி நேரத்தை கணிசமாகக் குறைக்க வழிவகுத்ததுள்ளது. இழுப்பீடு கணக்கிடுவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**7.5.2 பட்டா மேல்முறையீட்டிற்கான புதிய மென்பொருள்**

வருவாய் பின்தொடர் பணியில் மேல்முறையீட்டு மனுக்களை இ–சேவை மையங்கள் மூலமாக குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறும் வகையில் புதிய மென்பொருள் TNeGA மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனில், விசாரணை நிலையையும் உத்தரவினையும் இணையதளம்

மூலமாக தெரிந்துகொள்ளலாம். இந்த மென்பொருள் வெளியீட்டிற்கு தயாராக உள்ளது.

### 7.6 நிலச்சீர்திருத்தம்

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் 37–A பிரிவுகளின் கீழ் விண்ணப்பங்களுக்கான முழுமையான செயல்முறை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பிரிவு 37–B பிரிவுக்கான இதே போன்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

### 7.7 மின்–அலுவலகம்

தலைமைச் செயலக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஆணையர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மின்–அலுவலகத்தை செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ளன. இதனால் அலுவலகப் பணிகள் நெறிமுறைபடுத்தப்பட்டு விரைவாக முடிக்கப் படுகிறது.

இனிவரும் காலங்களில், மின்–ஆளுமை மூலம் பொது மக்களுக்கான சேவைகளை முழுமையாக வழங்க வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தயாராக உள்ளது.

**கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்**
**வருவாய் மற்றும் பேரிடர்**
**மேலாண்மைத்துறை அமைச்சர்**